தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 326

# இராசகோபால மாலை

[நீதி இலக்கிய நூல்]

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

**ய. மணிகண்டன்** எம்.ஏ., எம்.ஃபில்.

வெளியீடு :

**இயக்குநர்**

**சரசுவதி மகால் நூலகம்**

**தஞ்சாவூர் - 613 009**

1991 ] [ விலை உரு. 18-00

தஞ்சாவூர் சரசுவதி மகல் வெளியீடு எண். 320

# இராசகோபால மாலை

[நீதி இலக்கிய நூல்]

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

ய. மணிகண்டன் எம்.ஏ., எம். ஃபில்.

வெளியீடு :

பொதுப்பதிப்பாசிரியர்:

பேரா. மு. சதாசிவம் எம்.ஏ., எம்.லிட்.

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் - 613 009

1991 ] [ விலை உரு. 18-00

# நூற் பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | இராசகோபால மாலை |
| பதிப்பாசிரியர் | : | ய. மணிகண்டன் எம் ஏ., எம்ஃபில் |
| வெளியிடுபவர் | : | மு. சதாசிவம், இயக்குனர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : | 320 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு ஆண்டு | : | 1991 மே |
| தாள் | : | SPB 14.2 kg |
| நூல் அளவு | : | 21×14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 136 |
| படிகள் | : | 1200 |
| எழுத்து | : | 10 புள்ளி, 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம். |
| பொருள் | : | நீதி இலக்கியம் |
| விலை | : | உரூ. 18-00 |

# வெளியீட்டாளர் முன்னுரை

இலக்கியத்தை நுவல்பொருள் அடிப்படையில் இயற்கை இலக்கியம், நீதி இலக்கியம், இறைமை இலக்கியம் முதலான வகைகளாக வகைப்படுத்திக் காண்பது வழக்கம். சங்க இலக்கியம் என்னும் இயற்கை இலக்கியத்தையும் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, சதகங்கள் முதலிய நீதி இலக்கியங்களையும், தேவாரம், திருவாசகம், நாலாயிரம் முதலான இறைமை இலக்கியங்களையும் பெற்றுச் சிறக்கும் பெருமைக்குரிய மொழியாக நமது தமிழ் மொழி திகழ்கின்றது.

நேர்த்திமிக்க நீதி இலக்கியங்கள் கற்கும் போது கவிதை அழகால் இன்புறுத்தியும் கற்றபின் வாழ்க்கையை நன்னெறியில் வாழ வழிகாட்டி அறிவுறுத்தியும் பயனளித்து வருகின்ற பான்மையன.

நீதி இலக்கியங்களில் ஒன்றான 'இராசகோபால மாலை' என்னும் பெயருடைய நமது நூலகச் சுவடி இங்கு நூலாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. நல்ல பதிப்பு அமைய வேண்டிய பதிப்பு நெறிமுறைகளின் அடிப்படையில் இந்நூல் நூலாராய்ச்சி, சுவடிப்பதிப்பு விவரம், மூலப்பாடல், அருஞ் சொற்பொருள், ஒப்புமை இலக்கியப் பகுதிகள், பாடவேறுபாடு சுட்டும் பகுதிகள், பின்னிணைப்புப் பகுதி, - கட்டுரை, நூற் சொல்லடைவு, பாட்டு முதற்குறிப்பகராதி, பதிப்புக்குப் பயன் பட்ட நூல் விவரங்கள் ஆகியவற்றைக் கொண்டு அழகுற அமைந்துள்ளது.

இந்நூலைத் திரு. **ய. மணிகண்டன்** திறம்படப் பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

இங்குப் பதிப்பிக்கப்படுகின்ற இந்நூலுக்கான ஓலைச் சுவடிகள் தாளியாப்பட்டி, **திரு. வை. பாலார் கவுண்டர்** அவர்களால் மகாலுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவை. அவர்களுக்குச் சரசுவதி மகால் நூலகத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நூலகத்தின் இப்பதிப்புக்கும், வழக்கம்போலப் பொருளுதவி செய்கின்ற நடுவண் அரசுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். நூலைத் திருத்தமுற அச்சிட்டுள்ள **சிதம்பரம் ஸ்ரீவேலன் அச்சகத்தார்க்கு** என் பாராட்டுகள்.

தஞ்சாவூர்,
16—5—91

**மு. சதாசிவம்**
இயக்குநர்

# பதிப்பாசிரியன் முகவுரை

'ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
யீங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.'

(தண்டியலங்கார மேற்கோட்பா)

தன்னேரிலாத தமிழ்மொழியின் வரலாற்றில் எண்ணற்ற நீதி இலக்கிய நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் ஒன்றான 'இராசகோபால மாலை' என்னும் இந்நூல் 'சரசுவதி மகால் நூலக'த்தில் உள்ள சுவடியினை (சுவடி எண்: 1828) அடிப் படையாகக் கொண்டு பதிப்பிக்கப்பெறுகின்றது.

இந்நூலகத்தில் உள்ள சுவடிகளைச் செப்பமாகப் பதிப் பித்து வெளியிடப் பொருளுதவி நல்கி வருகின்ற நடுவண் அரசின் பொருளுதவி பெற்று இந்நூலும் 'சரசுவதி மகால் நூலக' வெளியீடாக வெளிவருகின்றது.

இப்பதிப்பு நூல், மூலப்பாடல், மூலப்பாடலுக்கான அருஞ் சொற்பொருள், ஒப்புமை இலக்கியப் பகுதிகள், பாட வேறுபாடுகளை அவ்வப்பாடல்களுக்குக் கீழே சுட்டும் பகுதி ஆகியவற்றையும், நூலின் தொடக்கத்தில் நூலாராய்ச்சி, சுவடிப் பதிப்பு விவரம் ஆகிய பகுதிகளையும், நூலின் இறுதி யில், 'நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகள், உவமைகள்' என்னும் பகுதி, ''தமிழில் பெண்பழிப்புப் பாடல்கள்'' என்னும் பின்னிணைப்புக் கட்டுரை, நூற்சொல்லடைவு பாட்டுமுதற் குறிப்பகராதி, பதிப்பிற்குப் பயன்பட்ட நூல்களின் விவரம் ஆகிய பகுதிகளையும் கொண்டுள்ளதாக உருவாக்கப் பெற்றுள்ளது.

அகவை இளமை கருதாது புலமை வளமை கருதிச் 'சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியனாகப்' பொறுப்பேற்று இந்நூலைப் பதிப்பிக்கும் வாய்ப்பினை நல்கிய சரசுவதி மகால் நூலக இயக்குநர். பேராசிரியர் **மு. சதாசிவம்** அவர்களின் நல்லுள்ளத்திற்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்தி மகிழ் கின்றேன்.

என் தமிழ்ப்பணிகளின் வினைப்பாடுகளில் என் குறிப் பறிந்து ஒத்துழைத்து வருகின்ற என் இளவல்கள் திரு. அ. இனியன், திரு. கோ. சோமசுந்தரம், திரு. க. பா. முத்துராமலிங்கம் முதலியோர் இப்பதிப்புப்பணி வினைப்பாடு களிலும் வழக்கம் போலச் செயல்பட்டார்கள். இவர்களுக்கு என் வாழ்த்துகளை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

| | | |
|---|---|---|
| **தஞ்சாவூர்** | } | **ய. மணிகண்டன்** |
| *16—5—91* | | சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியன் |

# உள்ளுறை


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | நூலாராய்ச்சி | 5-11 |
| 2. | சுவடிப் பதிப்பு விவரம் | 12-16 |
| 3. | **நூல் — இராசகோபால மாலை** | 17-80 |
| 4. | நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகள், உவமைகள் | 81-84 |
| 5. | பின்னிணைப்பு: தமிழில் பெண் வெறுப்பு—பழிப்புப் பாடல்கள், | 85-108 |
| 6. | சொல்லடைவு | 109-123 |
| | பேச்சு வழக்குச் சொல்லடைவு | 125,126 |
| 7. | பாடல் முதற்குறிப்பு அகராதி | 127,128 |
| 8. | துணை நூற்பட்டியல் | 129-131 |

# வேண்டுகோள்!

கருணையுள்ளங் கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிற வற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை, பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதாடைவதற்கு முன் எம்மிடம் அன்பளிப்பாகக்கொடுத்து தவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர், அவை பதிப்பாகி வருமாயின். சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப் பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே ''நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்'' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்

தஞ்சாவூர்
2—7—91

**பேரா. மு. சதாசிவம்**
எம்.,ஏ.,எம் லிட்
இயக்குநர்
**சரசுவதி மகால் நூலகம்**

# நூலாராய்ச்சி

**எழுவாய் :**

திருமாலின் பெயர்களில் ஒன்றாகிய 'இராசகோபாலன்'' என்னும் பெயரோடு 'மாலை' என்னும் இலக்கிய வகைப்பெயர் இணையப்பெற்ற தலைப்பினைப் பெற்றுள்ளது இந்நூல்.

**மாலை :**

தமிழில் காணப்படுகின்ற சிற்றிலக்கியங்களில் 'மாலை', என்பதும் ஒருவகையாகும். இந்நூல் 'மாலை' என்னும் பெயர் கொண்டு முடிகின்ற போதிலும், மாலை இலக்கியங்களுக்குக் கூறப்படும் இலக்கணத்திலிருந்து வேறுபட்டு விளங்குகின்றது.

சகலகலாவல்லி, மாலை திருவேங்கட மாலை முதலிய மாலை நூல்கள் இறைமை இலக்கிய நூல்களாகும். 'இராச கோபால மாலை' என்னும் இந்நூலோ **நீதி இலக்கிய நூலாகும்.** இந்நூலின் பாடல்கள் அனைத்தும் 'ராசகோ பால மாலை' என்னும் தொடரை ஈற்று அரையடியாகக் கொண்டு முடி கின்றன.

**நூலமைப்பு :**

இந்நூலில் காப்புச்செய்யுள் ஒன்றும் நூற்பயன் உரைக்கும் செய்யுள் ஒன்றும் தவிர்த்து 53 பாடல்கள் உள்ளன. மக்கள் வாழ்வில் - நாவில் அடிக்கடி பயின்று வருகின்ற எளிய - இனிய பழமொழிகளை உவமைகளாகக் கூறி ஒவ்வொரு பாடலும் நீதிக் கருத்துகளை எடுத்துமொழிகின்றன. ஏற்கெனவே பல இலக்கியங்களில் பயின்றுள்ள தொடர்கள் - பழமொழிகள் இந்நூலின் நடையிலே அமைந்து காணப்படுகின்றன. இந் நூலின் நடை பேச்சு வழக்குச் சொற்களையும் கொண்டு அமைந்துள்ளமை சுட்டத்தக்கது.

**நீதி இலக்கிய நூல்கள் :**

தமிழில் நீதி இலக்கியங்களுக்குத் தனித்த வரலாறுண்டு. சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே அறநெறிக் கருத்துகள் பயில்கின்றன. (அறப்பாடிற்றே - புறநானூறு - 34 போல) திருக்குறளின் அறத்துப்பாலும், பொருட்பாலும் தமிழ்நீதி இலக்கிய வரலாற்றில் தனித்த இடத்தைப் பெறும் தன்மையன. இனியவை நாற்பது, ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், பழமொழி நானூறு, நாலடியார் முதலிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் நீதி நூல் வரலாற்றில் குறிப்பிடத் தக்கவையாகும். அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், தண்டலையார் சதகம் முதலான சதக நூல்களும் ஔவையார் (வாக்குண்டாம். நல்வழி) அதிவீர ராம பாண்டியர் (வெற்றிவேற்கை) உலகநாதபண்டிதர் (உலக நீதி), குமரகுருபரர் (நீதிநெறி விளக்கம்), சிவப்பிரகாசர் (நன்னெறி) முதலியோரின் நீதி நூல்களும் நீதி கூறும் இலக்கியங்களாகவே தமிழில் நின்று நிலவுகின்றன.

விவேகசிந்தாமணி நூலில் நீதிகூறும் பாடல்கள் பல உள்ளன. இம்மரபின் தொடர்ச்சியாக இங்குப் பதிப்பிக்கப்படுகின்ற 'இராசகோபால மாலை' நூல் விளங்குகின்றது எனலாம். முன்னை நீதி இலக்கிய நூல்கள் கூறும் கருத்துகள், உவமைகள், பழமொழிகள் ஆகியவற்றைப் போற்றி 'இராசகோபால மாலை' அவற்றைத் தன்னுள் கொண்டு திகழ்கின்றது.

**நூல் நுவலும் நீதிக்கருத்துகள் :**

'அற்பர்களுக்கு நல்லவர், தீயவர் இருவரையும் வேறுபடுத்தி அறிந்து, நல்லவர்களைப் போற்றி வாழத் தெரியாது'. (1), 'புல்லர்களுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்த முயன்றாலும் அவர்கள் தங்கள் இயல்பை மாற்றிக்கொள்ள மாட்டார்கள்' (2), 'அற்பர்கள் குணத்தை நல்லோர் மாற்ற முயன்றாலும் முடியாது' (4), 'பொருள் பறிக்கக்கருதி இனிக்க இனிக்கப் பேசும் பரத்தையரின் சொல்லை நம்பக்கூடாது' (7), 'பெரியோர்களை இகழக் கூடாது' (11), 'துர்ச்சனருக்கு உதவிசெய்வதால் எந்தப் பயனும் ஏற்படாது' (12), 'அன்பில்லாதார்

இடும் அறுசுவை உணவினை உண்பதினும் பட்டினி கிடப்பதே மேல்' (13). 'இளமையில் கல்விகற்க வேண்டும்' , 'நீதிநெறிப் படி நாடு ஆளப்பட வேண்டும்' (17) , 'செய்ந்நன்றி மறக்கக் கூடாது' (21), 'தர்மமே வெல்லும்' (25), 'உண்மையே பேச வேண்டும்' (24). 'பொருளைத்தேடிப் பின் அதனைப் புதைத்து வைத்து வாழக் கூடாது' (30). 'பரத்தையர் உறவு கூடாது' 'குருவினைச் சீடன் இகழக்கூடாது', (32) 'உயர்ந்தவரைச் சேர்ந்து ஒழுகினால் சேர்ந்து ஒழுகுவாரும் உயர்நிலையை அடைவர்' (34) 'இடர்வரும்போது ஒதுங்கிவிடும் பெண்ணின் உறவுகூடாது' (37), 'செல்வமிருந்தால் ஒருவனை எல்லோரும் மதிப்பர்; செல்வமில்லையேல் ஒருவரும் மதிக்கமாட்டார்கள்' (38), முதலிய நீதிக்கருத்துகளைக் கூறுவனவாக இந்நூலின் பாடல்கள் அமைந்துள்ளன.

**நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் — உவமைகள்:**

நீதிக்கருத்துகளைக் கற்போர் மனத்தில் பதிய வைக்க நூலாசிரியர் பழமொழிகளையும் உவமைகளையும் (பழமொழி களையே உவமைகளாகவும்)நூற்பாடல்கள் தோறும் கையாண் டுள்ளனர்.

'தாமரைத் தேனின் அருமையை அருகிலிருக்கும் தவளை அறியாது. தொலைவிலிருந்தாலும் வண்டுகள் அறியும்' (1), 'பேய்க்குமட்டிக் காயை ஐங்காயமிட்டுச் சமைத்தாலும் அதன் கசப்பு மாறாது' (2), மூன்று வேளையும் பாம்புக்கு முலைப் பாலூட்டி வளர்த்தாலும் அதன் விஷத்தன்மை போகாது' (4), 'வேப்பஞ் சாற்றில் தேனைக் கலந்தாலும் வேம்பின் கசப்பு நீங்காது' (5), 'எருக்கு மிகுதியாகப் பூத்தாலும் மருக் கொழுந்தின் மணத்தைப் பெறமுடியாது' (10). 'மேட்டில் விதைத்த செந்நெல் பயிராகாது' (12). 'குப்பையிலே கிடந் தாலும் இரத்தினத்தின் ஒளிபோகாது' (15), 'நாதமில்லாத சங்கு போல' (17), 'கோடி மீன்கள் வானில் உதித்தாலும் சந்திரனுக்கு அவை ஈடாகா' (18), 'திக்கெல்லாம் மழைபெய்து தெருவெல்லாம் தண்ணீர் பெருகி ஓடிலாலும் நாய் தண்ணீரை நக்கி நக்கித்தான் குடிக்கும்' (30), 'மேரு மலையைச் சேர்ந்த

காக்கையும் பொன்னிறமாகும்' (34), 'பூவோடு சேர்ந்த வாழை நாரும் மணம்பெறும்' (34), 'சந்திரனைப் பார்த்து நாய் குரைத்ததுபோல்' (45) முதலிய அழகிய, பழக்கத்தில் உள்ள பழமொழிகளையும் உவமைகளையும் நூலில் ஆசிரியர் ஆண்டுள்ளார்.

**நூலில் காணப்படும் பெண்களைக் குறிக்கும் சொற்கள்:**

மடந்தையர், மாதர், பெண்டிர், நேரிழை, அரிவையர், மாது, நங்கையர், நாரியர்.

உறவு முறையில்: மனைவி, தாய்.

**பொருட்பெண்டிர்:** வேசியர், பரத்தை.

**நூலில் காணப்படும் தமிழின் சிறப்புரைக்கும் தொடர்கள்:**

தமிழறிவித்தோர், தமிழெனவுரைத்த, நத்தமிழ்க் (நற்றமிழ்) கீடுண்டோ?

**நூலில் காணப்படும் தெய்வப்பெயர்கள்:**

இராசகோபாலன், தெய்வானை வள்ளி, கந்தன், கணபதி, அயன், மாயன், அச்சுதன், வாசவன்.

**சமையத்தலைவர் பெயர்:**

புத்தர்.

**புராண, இதிகாசக் கதைத்தலைவர் பெயர்கள்:**

திருதராட்டிரன், தர்மர்

**குறிப்பால் உணர்த்தப் பெறுபவர்:**

துரியோதனன், இராவணன்.

**மகுடமிடல் :**

ஒரே குறிப்பிட்ட தொடர் பாடல்தோறும் இறுதியடியில் வந்து அமைவதை 'மகுடமிடல்' என்று குறிப்பது மரபு. இந் நூலில் உள்ள அனைத்துப் பாடல்களும் தம் இறுதி அரை அடியில்' ராசகோபாலமாலை' என்னும் தொடரை மகு– மாகப் பெற்றுத் திகழ்கின்றன.

**நூல்யாப்பு :**

(i) காப்புப் பாடலாக இடம்பெற்றுள்ள முதற்பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பினால் ஆனது. இவ்விருத்தப் பாடலின் சீர் வாய்பாடு :

'காய், காய் மா தேமா'
காய் காய் மா தேமா'

ii) நூலாக அமைந்துள்ள ஐம்பத்து மூன்று பாடல்களும் நூற்பயன் உரைக்கும் ஒருபாடலும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பினால் ஆனவை. இவ்விருத்தப்பாக் களுக்கான சீர் வாய்பாடு:

'விளம் மா தேமா
விளம் மா தேமா'

இவ்விருவகை விருத்தப்பாக்களும் தமிழிலக்கிய மரபில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவை. தேவார, திவ்வியப் பிரபந்த காலத்திலிருந்து மிகுதியாக ஆளப்பெற்று வருபவை. இனிய ஔசயமைப்பை ஏந்தி நிற்பவை. இந்நூலின் பாக்களும் இனிய ஓசையை — ஒட்டத்தை உடையனவாக இலங்கு கின்றன.

**தொடையமைதி:**

i) **தலையாகெதுகை**

அடிதோறும் முதற்சீர் சீர்முழுதும் ஓசை ஒன்ற அமைவது 'தலையாகு எதுகை' எனப்படும். தலையாகு எதுகை பெற்ற பாக்கள் ஓசைச்செழுமை உடையனவாகத் திகழும். தலையாகு எதுகை பெற்ற சில பாக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டு:

**'வேதமில் லாத பாப்பு**
**வித்தையில் லாத பிள்ளை**
**சாதமில் லாத பூசை**
**தந்தியில் லாத வீணை**

நீதமில் லாத ஊரு
நேரிழை யிலாத மாடம்
நாதமில் லாத சங்காம்
ராசகோ பால மாலை' (17)

ii) **மோனையமைப்பு:**

வழக்கமான இலக்கண நூல்கள் சுட்டும், இலக்கிய நூல்கள் காட்டும் மோனையெழுத்துகளையே இந்நூற் பாடலடிகளும் பெற்றுச் சிறக்கின்றன.

இந்நூலில் ந, நா என்னும் இரு எழுத்துகளும் 'ரா' என்னும் எழுத்துக்கு உரிய மோனை எழுத்துகளாக இந்நூற் பாடல்கள் அனைத்திலும் பயில்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

(iii) **இயைபுத்தொடை:**

அடிதோறும் அல்லது அரையடிதோறும் ஈற்றுச்சீர் ஓசை ஒத்து அமைவது பாடல்களுக்கு ஓசையழகை ஊட்டும். இவ்வாறு அமைவதை 'இயைபுத்தொடை' என்று வரையறுப்பர் இலக்கணிகள்.

இந்நூலில் உள்ள பாக்கள் அனைத்தும் இயைபுத் தொடை கொண்டனவாக அமையவில்லை என்ற போதிலும் அமைந்துள்ள இடங்கள் ஓசை கொழிப்பனவாய் உள்ளம் - பிணிப்பனவாய் விளங்குகின்றன.

**சான்றுக்கு ஒரு பகுதி:**

"பங்கைய முகங்கள் காட்டிப்
பாதத்தில் சிலம்பு பூட்டிக்
கொங்கைகள் குலுங்கக் காட்டிக்
கோவையி னமுர்த மூட்டி" (37)

**இலக்கண அமைதி:**

i) இந்நூலின் காப்புச் செய்யுளில் நான்காம் அடியில் ஒரு சீர் அதிகமாக இடம்பெற்றுள்ளது.

(ii) இந்நூற் பாடல்களில் ஓரீர் இடங்கள் குற்றியலுகரப் புணர்ச்சிப் பிழையுடைய அடிகளைக் கொண்டுள்ளன. புணர்த்தி எழுதினால் அசைகள் குறையும். அதனால் சீரமைப்பு கெடுகின்ற நிலை உள்ளது.

**நூலாசிரியர்:**

நூலாசிரியர் பெயரையும், அவர்தம் காலத்தையும் அறியவோ ஊகிக்கவோ துணைசெய்யும் சான்றுகள் எதுவும் நூலில் — சுவடியில் காணப்பெறவில்லை.

**இறுவாய் :**

எளிய சொல்லமைப்பும், இனிய நடையமைப்பும், நல்ல நீதிகளைக் கூறும் பாடுபொருளும், பாடுபொருளைக் கற்போர் நெஞ்சில் பதியவைக்கப் பயன்படும் பழமொழிகளும், உவமைகளும், பேச்சு வழக்குச் சொல்லாட்சியும் கொண்டிலங்குகின்ற நூலாக 'இராசகோபால மாலை' திகழ்கின்றது.

—o—

# சுவடிப் பதிப்பு விவரம்

'இராசகோபாலமாலை' என்னும் தலைப்பில் சரசுவதி மகால் நூலகத்தில் நான்கு சுவடிகள் உள்ளன. சுவடி எண்கள் 1708, 1709. 1827, 1828, ஆகியவற்றைக் கொண்டனவே அச்சுவடிகள். நான்கு சுவடிகளில் முழுமையும் தெளிவும் உடையதாக 1828 ஆம் எண்ணைக் கொண்ட சுவடியே அமைந்துள்ளது. பிற சுவடிகள முழுமை குன்றியனவாக உள்ளன. **முழுமை கொண்ட 1828 ஆம் எண்ணுடைய சுவடியே 'இராசகோபால மாலை' நூற்பதிப்புக்கு மூலமாக - முதன்மைச் சுவடியாகக் கொள்ளப்பட்டது**. பிற மூன்று சுவடிகளும் துணைமை நிலையில் ஒப்பு நோக்கவும், பாட வேறுபாடு காணவும் பயன்படுத்தப்பெற்றன. பிற மூன்று சுவடிகளில் 1827 ஆம் எண்ணுடைய சுவடியே முதன்மைச் சுவடியிலிருந்து மிகுதியாக வேறுபட்ட பாடங்களைக் கொண்டும் புதிய பாடல்களைக் கொண்டும் காணப்படுகிறது. 1708, 1709 ஆகிய இரு சுவடிகளும் முதன்மைச் சுவடியுடன் பேரளவுக்கு ஒத்தே அமைந்துள்ளன.

### 1708 ஆம் எண்ணுடைய சுவடி குறித்த குறிப்பு:

இச்சுவடி முழுமையுடையதாக இல்லை. இச்சுவடியில் 12 ஏடுகளில் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. காப்புச் செய்யுள் தவிர்த்து 44 பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

### 1709 ஆம் எண்ணுடைய சுவடி குறித்த குறிப்பு:

இச்சுவடியும் முழுமையுடையதாக இல்லை. இச்சுவடியில் 11 ஏடுகளில் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. ஓர் ஏட்டில் சுவடி எழுதப்பட்ட குறிப்பு உள்ளது. காப்புச்செய்யுள் தவிர்த்து 40 பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

### 1827 ஆம் எண்ணுடைய சுவடி குறித்த குறிப்பு:

இச்சுவடியின் எழுத்து வடிவமும் பாடல்களும் பிற சுவடி களிலிருந்து பெரிதும் வேறுபட்டுள்ளது. முதன்மைச் சுவடியில்

நூல் முழுவதும் உள்ளது. இச்சுவடியிலோ அந்நூலின் பெயரால் புதிய சில பாடல்களும் காணப்படுகின்றன. முதன்மைச் சுவடியில் உள்ள பாடல்களின் வரிசை ஒழுங்கி. லிருந்தும் இச்சுவடியின் பாடல்கள் மாறி அமைந்துள்ளன- நூல் முழுமையும் இதில் இல்லை. இச்சுவடியில் 17 எடுகளில் பாடல்கள் எழுதப்பெற்றுள்ளன. அவைதவிர ஓர் ஏட்டில் ஏடு எழுதி முடிந்தமை குறித்த குறிப்பு உள்ளது.

இச்சுவடியின் தொடக்கத்தில்

'வேக மாய்நெறி சேரும் வினைகளும்
தாக போக விடாத தளர்ச்சியும்
சோக வாரினும் நால்வரு துன்பமும்
போக யானை முகத்தனைப் போற்றுவாம்'

என்னும் பாடல் இடம் பெற்றுள்ளது. மேலும் மற்றைய சுவடி களில் இல்லாமல் இச்சுவடியில் மட்டும் இடம் பெற்றுள்ள பாடல்கள் பின் வருமாறு:

எலிவேது வாழ்வென் றெண்ணி
யிரையவற் கதிரைக் கொய்து
வலிகொளுங் குகைக ளான
மடக்களஞ் சியத்தில் சேர்க்கும்
எலியொரு கரியு மாகி
பானிய நெற்சோறு மான
நலிபுதர் நரிய வேணும்
ராசகோ பால மாலே!' (௰க)

'மடையர்கள் கற்றோர் தம்மை
வணங்குவ தன்றி யந்தக்
கொடியரைக் கற்றோர் தாமும்
கும்பிட நீதி யுண்டோ !

படிமிசை நீதி தப்பிப்
பாழ்நர கழுந்தும் பேர்கள்
நடுவில ஞாய மில்லை!
ராசகோ பால மாலெ!' (௩௰)

'சார்ந்தவானம் பெரியோ னென்றும்
சாஸ்த்திர முரைப்பக் கேட்ட
மாந்தரில் துஷ்ட்டன் தன்னை
வல்லவ னென்ப தென்றோ?
கூர்ந்தறி வாளர் சொல்லார்
கொடியர்கள் சொல்லா ரென்றோ!
நான்துணி வாகச் சொன்னேன்!
ராசகோ பால மாலெ!' (௩௧)

'மண்ணினிற் பிறப்போர்க் கெல்லாம்
மாந்தரின் குணமுண் .........
விண்ணினிற் கோடா கோடி
மீன்கள்பா னுவினொப் பா....
கண்ணினி னொளிவர் போல
கதிரவ னெளிவுண் டா
நண்ணிய தறிய வேணும்
ராசகோ பால மாலெ. (உ௰அ)

'இராசகோபால மாலை' என்னுந் தலைப்பில் உள்ள மற்றைய சுவடிகளில் உள்ள ஒவ்வொரு பாடலும் இறுதி யரையடி 'ராசகோ பால மாலை' என்னுந் தொடர்கொண்டு முடிவதாக அமைந்துள்ளது. இச்சுவடியில் உள்ள பாடல்கள் மட்டும் 'ராசகோ பால மாலே' அல்லது 'ராசகோ பால மாலெ' என்னும் இருவகைத் தொடர்களில் ஏதாவது ஒன்றைப் பெற்று முடிவனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**1828 ஆம் எண்ணைக் கொண்ட இந்நூற்பதிப்பிற்கு அடிப்படையான முதன்மைச் சுவடி :**

இச்சுவடியில் மட்டுமே நூல் முழுமையாகவும் தெளிவாகவும் உள்ளது. இச் சுவடியில் 15 ஏடுகளில் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன. சுவடிக் கட்டின் மேற்புறத்தில் 'தாளியாப்பட்டியிலேயிருக்கும் கோ. முத்துக்கருப்பக்கோனானுக்குப் புண்ணிய குமாரனாகிய ராமசாமி ராசகோபால மாலை' என்னும் குறிப்புக் காணப்படுகிறது.

தாளியாப்பட்டி இராமசாமி என்னும் பெயர் ஏடு எழுதியவர் தொடர்பாகவே குறிக்கப்பட்டிருக்க வேண்டும். வேறு நூற் சுவடிகளிலும் இப்பெயர் உள்ளது.
சுவடிக்கட்டின் இறுதிப் புறத்தில்

'பத்துக்கால் மூன்றுதலை பார்க்கமிக வாய்நாலும்
தித்திக்கக் கண்ணேழும் செப்பினோம் - யித்தியும்
ஓரிடத்தில் கண்டேன்னா கோரெ குறாமா
பாரிடத்தில் இக்கதையைப் பார்'

என்னும் வெண்பா எழுதப் பெற்றுள்ளது. இவ்வெண்பா வேறு நூல்களுக்கான சுவ்டிகள் சிலவற்றிலும் எழுதப் பெற்றுள்ளமை சுட்டத் தக்கது.

**தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் காணப்பெறும் 'இராசகோபால மாலை'ச் சுவடிகள் விவரம்:**

1427, 1635, 1966 ஆகிய எண்களைக் கொண்ட 'இராசகோபால மாலை' நூலின் மூன்று சுவடிகள் தமிழ்ப்பல்கலைக் கழகச் சுவடித் துறையில் உள்ளன. மூன்றில் எதிலும் நூல் முழுமையாக இல்லை. சரசுவதி மகால் நூலகச் சுவடியில் தான் நூல் முழுமையாக உள்ளது. மகாலில் உள்ள சுவடிகளுக்கும் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் உள்ள சுவடிகளுக்கும் சிற்சில சிறு வேறுபாடுகள் (பாடவேறுபாடு) உள்ளமை தெரிய வருகின்றது. 1635 ஆம் எண்ணுடைய பல்கலைக்கழகச் சுவடி, 1827 ஆம் எண்ணுடைய சரசுவதி மகால் சுவடியில் உள்ளதைப் போல ஒவ்வொரு பாடலின் இறுதி அரையடியும், 'இராசகோபால மாலே' என்று முடிவதாக உள்ளது.

**இராசகோபால மாலை'யின் இப்பதிப்பு :**

1828 ஆம் எண்ணுடைய 'இராசகோபால மாலை 'ச் சுவடியினை அடிப்படையாகக் கொண்டது இப்பதிப்பு. இராச கோபால மாலையின் இச்சுவடியினைச் சுவடிப் படியெடுப்பாளராக மகாலில் பணிபுரிந்த காலத்தில் நானே படியெடுத்து எழுதும் நல்வாய்ப்புப் பெற்றேன். மகாலில் உள்ள இராச கோபால மாலையின் பிற சுவடிகள் ஒப்புநோக்கிப் பார்க்கப் பெற்று நூலின் பாடல்தோறும் பாடவேறுபாடு இருப்பின் அவை சுவடி எண் குறிப்பிட்டு எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. நூல் பேச்சு வழக்குச் சொற்களை ஆங்காங்கே கொண்டதாக உள்ளது, நூலினை யாத்த கவிஞரும் நூல்நடை குறித்துக் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் பேச்சு வழக்குச் சொற்களில் எந்த மாற்றமும் செய்யப்பெறவில்லை. ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழை என்று ஊகிக்கத்தக்க எழுத்துப் பிழைகள் (ழ-ள வேறுபாடு ; வாழும் - வாளும்) மட்டும் இப்பதிப்பில் சீர் செய்யப்பெற்றுள்ளன. இப்பிழைகளும் ஒருவேளை பேச்சு வழக்குத் தாக்கமாக இருக்கக்கூடும். அவ்வாறிருப்பினும் மொழிநலம் நோக்கியதே இச்சீர்திருத்தம்.

இந்நூலில் பாடல்களுக்குக் கீழே அருஞ்சொற்களுக்குப் பொருள் காட்டப்பட்டுள்ளது. பாடலில் பயிலும் பழமொழி — தொடர்களுக்கு ஒத்த இலக்கிய ஒப்புமைப் பகுதிகள், பாடல்கள் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. 'தமிழில் பெண் பழிப்புப் பாடல்கள்' என்னும் கட்டுரை பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. நூலின் தொடக்கத்தில் 'நூலாராய்ச்சி' என்னுந் தலைப்பில் நூல்பற்றிய குறிப்புகளும் நூலின் இறுதியில் நூற்சொல்லடைவும், நூலின் பாட்டு முதற்குறிப்பு அகராதியும் தரப்பட்டுள்ளன.

## காப்புச் செய்யுள்

நந்தன்மகன் மோதகத்தின் வரையில் வாழும்
ராசகோ பாலனெனும் மாலை தன்னை
விந்தையுடன் பூவுலகில் நீதி சாரம்
விபரமுட னடியேனும் விளம்பும் பாடல்
பந்துமுலை தெய்வானை வள்ளி பங்கன்
பாரமயி லேறிஒயில் பவனி மீறும்
கந்தனுக்கு முன்பிறந்த ஐங்க ரத்தோன் [சித்திக்]
கணபதிதா ளிருசரணங் காப்புத் தானே.

**பாவகை: எண்சீர் ஆசிரிய விருத்தப்பா.**

**அருஞ்சொற்பொருள்:**

**நந்தன்மகன்** — நந்தகோபாலரின் வளர்ப்பு மகனான கண்ணபிரான், **மோதகம்** — கொழுக்கட்டை, மகிழ்ச்சி, இணக்கம். மோதவம் எனில் 'மணம்'. **வரை** — மலை. **மாலை** — சொன்மாலை, பாமாலை. விளம்பும் — சொல்லும், தெய்வானை வள்ளி பங்கன் — தெய்வயானைக்கும் வள்ளிக்கும் கணவனான முருகன். **மீறும்** — மேலேறிச் செல்லல், **கந்தன்** — அடியார்க்குப் பற்றுக்கோடாக உள்ள முருகக் கடவுள். **ஐங்கரத்தோன்** — துதிக்கையுடன் சேர்த்து ஐந்து கைகளை உடைய விநாயகன். **கணபதி** — விநாயகன். **தாள்** — கால், பாதம்.

விநாயகரை நூலாசிரியர் பராவுகின்ற பாடல் இது,

**குறிப்பு:**

1. மாலிய (வைணவ) சமையக் கடவுட் பெயரால் ஆன நூலாயினும் விநாயகரே காப்புக் கடவுளாகப் பராவப் படுகின்றார். விநாயகரைக் குறிப்பிட வருகையில் முருகனின் சிறப்பும் சுட்டுப்படுவது குறிப்பிடத்தக்கது. நூலாசிரியரின் சமயக் காழ்ப்பின்மை இதனால் தெள்ளிதின் புலனாகின்றது.

2. இப்பாடலின் நான்காம் அடியில் 'சித்திக்' என்னும் சீர் மிகைச்சீராக உள்ளது. அச்சீரையும் சேர்த்தால் நான்காம் அடியில் ஒன்பது சீராகின்றது. ஒவ்வோர் அடியிலும் இப் பாடலில் எட்டுச் சீர்கள்தாம் வரவேண்டும்.

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1708
'கணபதியா னிரு'

## நூல்

[நூல் முழுவதிலும் அமைந்துள்ள பாடல்கள் **அறுசீர் ஆசிரிய விருத்தப் பாவகையால் ஆனவை.**]

### 1

தண்டமா மலரின் தேனைத்
 தனித்தனி வனத்தில் வாழும்
வண்டது அறியு மல்லால்
 மண்டூக மறிந்தி டாது
கண்டது கடத்துன் மார்க்கர்
 கசடர்க்கு நல்லோர் பொல்லார்
ரண்டதுந் தெரியா தையா
 ராசகோ பால மாலை

**அருஞ்சொற்பொருள்:**

**தண்டமா மலர்** — குளிர்ந்த நீர்நிலையில் பூத்திருக்கும் மலர், **வனம்** — காடு; ஊர் சூழ்ந்த சோலை, **மண்டூகம்** — தவளை, **துன்மார்க்கர்** — தீ நெறியாளர்.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

தண்டா மரையின் உடன்பிறந்துந்
 தண்டே னுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து
 வந்தே கமல மதுவுண்ணும்

பண்டே பழகி யிருந்தாலு
மறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பர் கற்றோரே.

விவேகசிந்தாமணி-8

**பழமொழி:**

மலர்த்தேனை வண்டு அல்லாமல் மண்டூகம் குடிக்குமோ?

*18064, தமிழ்ப்பழமொழிகள்*

**குறிப்பு :**

தாமரைத் தேனின் உயர்வைத்
"தாமரைத் தண்டா(து) ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன்" என்னும்
நற்றிணைப் பாடலடிகள் (கபிலர் பாடல், பாடல் எண் 1) நன்குணர்த்தும்.

**பாட வேறுபாடு:**

சுவடி எண் : 1708
"பொல்லோர்"

சுவடி எண் : 1709
"கசடர்க்கும் நல்லோர் பொல்லார்"

சுவடி எண் : 1827
"கண்ட துற் மார்க்க ரானக்"

2

பேய்க்கருங் குமட்டிக் காய்க்குப்
பேணிஜங் காய மிட்டு
ஆக்கினா லுங்க சக்கும்
அதுகுணம் ருசியுண் டாமோ?
போக்குநீக் கறியா மாந்தர்
புல்லருக் கறிவு சொன்னால்
நாய்க்குணம் போகா தையா!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**பேய்க்கருங்குமட்டிக்காய்**—பேய்க் கொம்மட்டிக் கொடியில் காய்க்கும் கசப்புத் தன்மையுடைய காய், 'பேய்த் தும்மட்டிக் காய்' என்றும் வழங்குவர். **ஐங்காயம்** — ஐந்து காயம்: கடுகு ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம். ருசி — சுவை **புல்லர்—** புல்லனைய தன்மை (புன்மை) யுடைய, சிறுமையுடைய மனிதர், கீழ்மக்கள்.

## ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:

**கசப்புத்தன்மை — குணம் மாறாமை:**

இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்;- தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பால் தயிர்காயம், பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

'மெய்ம்மை', நாலடியார் — 116

'கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையாகு மோ?'

குமரேச சதகம் — 46

'படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழ முந்திரிப்
பழமதற் கிணையாகு மோ'

திருவேங்கட சதகம் — 13

'வெண்மைகரு சீனிச் சொரிந்துபயிர் செய்யினும்
வெள்ளுள்ளி குணமாறு மோ?

..................................................

..................................................

சற்குணமி லாதவர்க் கெத்தனை யுரைக்கினுஞ்
சண்டிக் குணம்போகு மோ?'

கயிலாச நாதர் சதகம் — 37

'சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும் பிறர்க்குறுதி
தனைச்சொன் னாலும்
அங்கணுல கிற்சிறியோர் தாமடங்கி நடந்துகதி
யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையா ரேசொன்னேன்
சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்சுரைக்காய் நல்ல
சுரைக்காயா காதே.

— தண்டலையார் சதகம்-14

''அடினும், பால்பெய்து கைப்பறாது பேய்ச்சுரைக்காய்''

— அதிவீரராம பாண்டியரின் வெற்றி வேற்கை — 28

பழமொழிகள்:

ஐங்காயம் இட்டு அரைத்துக் கரைத்தாலும்
தன் நாற்றம் போகாதாம் பேய்ச்சுரைக்காய்க்கு

— தமிழ்ப் பழமொழிகள் — 5750

ஐங்காயம் இட்டு அவரைப் பருப்பு இட்டாலும்
தன் நாற்றம்போகாது பேய்ச்சுரைக்காய்.

— தமிழ்ப்பழமொழிகள் — 5751

நாய்க்குணம்:

'பொற்கலத் தூட்டிப் புறந்தரினும் நாய்பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கும்; — அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யுங்
கருமங்கள் வேறு படும்'

'பொருட்பால் — கீழ்மை,' நாலடியார் — 345

'நாய் சுக்கித் தின்றது போல' (14085)
'நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டுள்ளே வைத்தாலும்
வாலைக் குழைத்துக் கொண்டு மலம் தின்னப்போகும்'.
(14307)
நாய்க்குக் கனவிலும் எச்சில் தின்பதுதான் யோசனை
(14008)

'நாயைக் குளிப்பாட்டிப் பல்லக்கில் ஏற்றினாலும்
எலும்பைக் கண்டால் வள்ளென்று தாவும்' (14309)
'நாற்பதுக்குமேல் நாய்க்குணம்; அம்பதுக்குமேல் ஆட்டம்;
அறுபதுக்கு ஓட்டம்' (14440) தமிழ்ப்பழமொழிகள்

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1708
'பேணியே காயமிட்டு'

சுவடி எண் 1827
'பேய்க்குமட் டியினங் காய்க்கி'

'ஆக்கினா லுங்க சக்த / மல்லது ருசியுண் டாமோ
போக்குநீக் கில்லா மூடர்/புல்லருக்கெ திணைச்சொன் னாலும்,

## 3

**பூத்திடும் மலரின் வாசம்**
**புனல்வண்டு அறியு மல்லால்**
**ஆத்திடை மண்டூ கந்தான்**
**அதுமண மறிந்தி டாது!**
**தோத்திய அறிவில் லாத**
**துர்க்குணம் படைத்தோர் செய்கை**
**நாய்தவம் செய்த தொக்கும்!**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள்:**

**புனல்** — ஆறு,நீர். **ஆத்திடை** – ஆற்றிடை, **மண்டூகம்** — தவளை, **தோத்திய** — தோற்றிய, **ஒக்கும்** — ஒப்பாகும்.

**குறிப்பு:**

'பூத்திடும்' என்னும் சொல்லின் எதுகையாக ஆற்றிடை, தோற்றிய என்னுஞ் சொற்களின் பேச்சு வழக்குச் சொற்களான 'ஆத்திடை, 'தோத்திய' என்பன செய்யுளில் இடம் பெற்றுள்ளன.

**பாட வேறுபாடு**

*சுவடி எண்: 1708*

*'நாய்தவஞ் செய்கை'*

*சுவடி எண்: 1827*

*'பூத்திடும் மலரின் வாசம்*
*புனல்வண்டு அறியு மல்லால்*
*நாற்றமோற் கசடர் வண்டு*
*றதுமண மறிந்தி டாது*
*தோற்றிற மறிவார் நல்லோர்*
*துற்குணம் படைத்த செய்கை*
*நாற்றவண் டதனோ டொக்கும்!*
*ராசகோ பால மாலே!*

4

முப்பொழு தரவு தன்னை
முலையமு தூட்டி நன்றாய்
உற்பன வளர்த்திட் டாலும்
ஓங்கிய விஷம்போ காது!
அற்பர்கள் குணத்தை நல்லோர்
அன்புவைத் தாலு மந்த
நற்பதை அறியா ரையா!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**அரவு** — பாம்பு (அரவம்), **முலையமுது** — பால், **விஷம்** — நஞ்சு, **உற்பனம்**—உயர்வு, **அற்பர்** —கீழ்மக்கள், **நற்பதை**— நல்ல தகுதி.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள் :**

'நஞ்சுதரு மரவொடும் பழகொணாது'

*அறப்பளீசுர சதகம் — 8*

'குட்டியர வுக்கமு தளித்தே வளர்க்கினுங்
கொடுவிட மலாது தருமோ ?

... .......................................... .. ...........

.....................................................................

மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமரி யாதைவரு மோ ?'

குமரேச சதகம் — 37

'கோதையர் முலைப்பால் குடித்துவளர் கினுமந்தி
கொடியகேட் டையினீங் குமோ?

.................................................................

.................................................................

சற்குணமி லாதவர்க் கெத்தனை யுரைக்கினுஞ்
சண்டிக் குணம்போகு மோ?'

— கயிலாசநாதர் சதகம் — 37

'பாம்பொடு பழகேல்!'

— ஔவையார் ஆத்திசூடி — 78

'நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்'

உலகநீதி — 2

'தூம்பினிற் புதைத்த கல்லும்
துகளன்றிச் சுடர்கொ டாது!
பாம்புக்குப் பால்வார்த் தென்றும்
பழகினும் நன்மை தாரா!
வேம்புக்குத் தேன்வார்த் தாலும்
வேப்பிலை கசப்பு மாறா!
தாம்பல நூல்கற் றாலுந்
துற்சனர் தக்கோ ராகார்!

விவேக சிந்தாமணி — 61

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1827

'எப்படி வளர்த்திட் டாலும்
இங்கித விஷம்போ காது
அப்படி யறிவில் லாதார்க்
கறிவுள்ளோர் போதித் தாலும்
நற்பரிந் தொழுக மாட்டார்
ராசகோ பால மாலே'

## 5

வல்லசெந் தேனின் மேலே
வாகுடன் வேப்பஞ் சாற்றை*
அல்லது கலந்திட் டாலும்
அதினுட கசப்ப றாது!
புல்லறி வாளர்க் கன்பு
புத்தியைப் போதித் தாலும்
நல்லவ ராகா ரையா!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள் :**

**செந்தேன்** — உயர்ந்த தேன்; அறுவகைப் புகைக்கும் நறுமணப் பொருள்களுள் ஒன்று. **புல்லறிவாளர்** — புன்மையான அறிவுடையவர், சிறுமதியாளர், அறிவுகுறைந்தோர்.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

தக்காரும் தக்கவ ரல்லாரும் தந்நீர்மை
எக்காலுங் குன்றல் இலராவர்!- அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம் கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு.

— 'மெய்ம்மை', நாலடியார் - 112

தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க! – மற்றவர்
யாவரே யாயினும் நன்கொழுகார் கைக்குமே
தேவரே தின்னினும் வேம்பு.

— 'கீழ்மக்கள் இயல்பு', பழமொழி நானூறு -95

---

* 'சாத்தை' என்றுள்ளது சுவடியில்

'நலஞ்சேரு மொருவரைப் பார்த்தது பெறக்கருதில்
நண்ணுமோ ரஸ்தாளிதன்
நற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராதுகாண்'

— அறப்பளீசுர சதகம் — 53

'கட்டியெரு விட்டுச் செழுந்தேனை வாக்கினுங்
காஞ்சிரங் கைப்பு விடுமோ?'

. ..........................................................................

..........................................................................

மட்டிகட் காயிரம் புத்திசொன் னாலுமதின்
மார்க்கமரி யாதை வருமோ?'

குமரேச சதகம் — 37

'காஞ்சிரங் கனியதைத் தேன்குடந் தனில்வெகு
காலம திருத்தி யென்ன?''

கயிலாசநாதர் சதகம் — 32

'வேதமந் திரமோதித் தேன்பால் புகட்டினும்
வேம்பது கரும்பாகு மோ.

..........................................................................

..........................................................................

சற்குணமி லாதவர்க் கெத்தனை யுரைக்கினுஞ்
சண்டிக் குணம்போகு மோ?'

— கயிலாசநாதர் சதகம் — 37

தூம்பினிற் புதைத்த கல்லும்
துகளன்றிச் சுடர்கொ டாது!
பாம்புக்குப் பால்வார்த் தென்றும்
பழகினும் நன்மை தாரா!
வேம்புக்குத் தேன்வார்த் தாலும்
வேப்பிலை கசப்பு மாறா!

தாம்பல நூல்கற் றாலுந்
துற்சனர் தக்கோ ராகார்!

— விவேகசிந்தாமணி — 61

**பாட வேறுபாடு:**

சுவடி எண்: 1827

'வல்லசெந் தேனி னூடே / வடிவுள்ள வேப்பஞ் சாற்றை
யல்லுறக் கலந்திட் டாலும் / அதுமண மறிந்தி டாது!'

6

**கடலது ஆழ மென்னுங்**
**கணக்கது உயரங் கண்டு**
**அடவுடன் தொகைசொன் னாலும்**
**அணிவரை முடிகண் டாலும்**
**மடபதி தனக்கு வாய்த்த**
**மனைவியாள் மனத்தின் வஞ்சம்**
**நடபடி யறியொண் ணாது!**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள் :**

**அணி** — வரிசை; அழகு, **வரை** — மலை,
**வரைமுடி** — மலையுச்சி, சிகரம், **மடபதி** — கணவன்,
**ஒண்ணாது** — முடியாது.

**ஒப்புமைப்பாடல்கள் பகுதிகள்:**

**காட்டில் புதைத்த கனதனமும் பாட்டில் புதைத்த பழம்பொருளும் வீட்டில் மனையாள் மனமும் நாட்டில் அறிவது அரிது!**

— *தமிழ்ப் பழமொழிகள் — 7826*

நீர் ஆழம் கண்டாலும் நேரிழையாள்
நெஞ்சாழம் காண முடியாது

தமிழ்ப் பழமொழிகள் — 14644

**பாட வேறுபாடு:**

*சுவடி எண் : 1708 'மடல்பதி'*

## 7

அம்புபோல் நீண்ட வாலாம்
அரவத்தை நம்பி னாலும்
கொம்பினால் கொலைகள்* செய்யும்
குஞ்சரந் தனைக்கண் டாலும்
வம்புசேர் மொழியி னார்கள்
மடந்தையர் சொல்லைத் தானே
நம்பினால் மோச மய்யா!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

அரவம் — *பாம்பு*, **கொம்பு** — *தந்தம்*, **குஞ்சரம்** — *யானை*, **மடந்தையர்** — *பெண்டிர்*.

**ஒப்புமைப் பாடல்கள் பகுதிகள்:**

'.....................................கொல்களிறு
கோட்டால்நோய் செய்யும் குறித்தாரை!'

— *திரிகடுகம்* — *14*

'பெண்புத்தி கேட்கின்ற பதர்'

— *குமரேச சதகம்* — *28*

'பெண்புத்தி கேட்கின்ற மூடருந்'

*அறப்பளீசுர சதகம்* — *35*

'உரங்காணும் பெண்ணாசை கொடிதாகும் பெண்புத்தி
யுதவா தாகும்

---

* 'குலைகள்' என்றுள்ளது சுவடியில்

திரங்காணும் பெண்வார்த்தை தீதாகும்
பெண்சென்மம்
சென்ம மாமோ?
வரங்காணுந் தண்டலைநீ ணெறியாரே
பெண்ணிடத்தின்
மயக்கத் தாலே
இரங்காத பேருமுண்டோ?பெண்ணென்ற வுடன்பேயு
மிரங்குந் தானே'
— *தண்டலையார் சதகம் - 85*

'தையல்சொல் கேளேல்'
— *ஔவையார் ஆத்திசூடி - 63*

'ஆல கால விடத்தையு நம்பலாம்
ஆற்றை யும்பெருங் காற்றையும் நம்பலாம்
கோல மாமத யானையை நம்பலாம்
கொல்லும் வேங்கைப் புலியையு நம்பலாம்
கால னார்விடு தூதரை நம்பலாம்
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினால்
தெருவினில் நின்று தியங்கித் தவிப்பரே!
— *விவேக சிந்தாமணி - 12*

படியினைப்பொழு தேவதைத்திடும்
பச்சைநாவியை நம்பலாம்!
பழிநமக்கென வழிமறித்திடும்
பழையநீலியை நம்பலாம்!
கொடுமதக்குவ டெனவளர்ந்திடு
குஞ்சரத்தையு நம்பலாம்!
குலுங்கப்பேசி நகைத்திடுஞ்சிறு
குமரர்தம்மையும் நம்பலாம்!
கடையிலக்கமு மெழுதிவிட்ட
கணக்கர்தம்மையும் நம்பலாம்!

காக்கைபோல்விழி பார்த்திடுங்குடி
காணியாளரை நம்பலாம் !
நடைகுலுக்கியும் முகமினுக்கியு
நகைநகைத்திடும் மாதரை
நம்பொணாதுமெய் நம்பொணாதுமெய்
நம்பொணாதுமெய் காணுமே!''

— விவேக சிந்தாமணி — 30

பெண்டுகள்சொற் கேட்கின்ற பேயரெனும்
குணமூடப் பேடி'

— விவேகசிந்தாமணி — 98

'மங்கைகைகேசி சொற்கேட்டு மன்னர்புகழ்
தசரதனும் மரண மானான்
செங்கமலச் சீதைசொல்லை சீராமன்
கேட்டவுடன் சென்றான் மான்பின்
தங்கையவள் சொற்கேட்ட ராவணனுங்
கிளையோடு தானு மாண்டான்!
நங்கையர்சொற் கேட்பதெல்லாங் கேடுவரும்
பேருலகோர் நகைப்பர் தாமே!'

— விவேகசிந்தாமணி - 117

**குறிப்பு:**

*இவற்றிலும் மேலான பெண்சொற் கேட்டலை எதிர்த்தல், பெண்களைப் பழித்தல் ஆகியவை குறித்த விளக்கத்தைப் பின்னிணைப்பு 1-இல் காண்க.*

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1827

'அம்புபோல் வார்த்தை பேசி / அசைந்தசைந் தாட்டி நல்ல
தும்பிபோல் கீதம் பாடித் / தோழருக் கிடுக்கஞ் செய்யும்
வம்புசேர் மொழிய ரான / மாதர்கள் சொல்லுஞ் சொல்லை
நம்பவும் போகா தையா / ராகோ பால மாலை.'

## 8

**கூட்டுதல் குறைந்து போகும் !**
**குறைந்தது நிறைந்து போகும்!**
**ஆட்டிய விதியின் கூறும்**
**அறிந்திடா திருந்த மாந்தர்**
**தாஷ்ட்டிமை பேசி நல்லோர்**
**தங்களைப் பழிப்ப தெல்லாம்**
**ராட்டனச் சுத்தோ டொக்கும் !**
**ராசகோ பால மாலை !**

**அருஞ்சொற்பொருள் :**

**மாந்தர்** — *மனிதர்*, **தாஷ்ட்டிமை**, — *வலிமை, இறுமாப்பு,* **இராட்டினம்** — *ஏறி விளையாடும் சுழல்தேர்,* **சுத்து** — *சுற்று,* (*சுத்து — பேச்சு வழக்கு*)

**பாடவேறுபாடு:**

*சுவடி எண் : 1827*
*'ஆட்டிய விதியின் கூறென்*
*றறிந்திடா'*

## 9

**கயந்தனில் துள்ளும் மீன்கள்**
**கரைதனில் வீழ்ந்து காயும்!**
**உயர்ந்தோர் வீண்கள் பேச்சும்**
**உலுத்தர்கள் மீனோ டொக்கும்!**
**பயந்ததோர் காரி யந்தான்**
**பராக்கிர(ம) மார்க்க மாகில்**
**நயந்துபின் பார்க்க வேணும்!**
**ராசகோ பால மாலை!**

அருஞ்சொற்பொருள்:

**கயம்**—நீர்நிலை, **காயும்**—வாடும், **உலுத்தர்**—பொருளாசைக் காரர்கள் ; உலோபி; புல்லன், **பயந்த** —உண்டான, **காரியம்**— செயல் **பராக்கிரமம்** — வல்லமை, வீரம், **மார்க்கம்** — நெறி; வழி, **நயந்து** — பயன்பட்டு; வேண்டி; விரும்பி.

## 10

எருக்கலாங் கொழுந்து மீறி
ஏகமாய்ப் பூத்திட் டாலும்
மருக்கொழுந் தினுக்குண் டான
வாசமு மணமு முண்டோ?
பிறர்க்குப கார மீயும்
பேச்சுநற் கேள்வி மெய்சொல்
நரகமு மிடர்வ ராது !
ராசகோ பால மாலை

அருஞ்சொற்பொருள்:

**எருக்கு** — எருக்கஞ்செடி, **ஏகமாய்** — மிகுதியாய், **உபகாரம்** — ஈகை; உதவி, **இடர்** — துன்பம்.

### ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:

பழமொழிகள்:

*எருக்கிலைக்கு மருக்கொழுந்து வாசனையா ? 5158*
*பட்டி எருக்கிலை, மடல் மடலாய்ப் பூத்தாலும்*
*மருக்கொழுந்து வாசனை ஆகுமா ? 17746*
*— தமிழ்ப் பழமொழிகள்*

பாட வேறுபாடு:

*சுவடி எண் : 1708*

*'வாசமு மணமும் போமோ, நரகத்துக் கிடர்வ ராது'*

சுவடி எண் : 1827

'எருக்கிலை ....................

........... ..........................................

மருக்கொழுந் துக்குண் டால

வாசமும் அழகும் உண்டோ?

பெருக்கமா யறிவில் லாதார்

பிரபலித் தாலு மென்ன ?

நற்குணம் நற்பெரி யோராமோ ?

ராசகோ பால மாலே !'

11

வாயது மட்டு மிஞ்சி

வாகுடன் பெரியோர் தன்னை

நேயமா யிகழ்ச்சி பேசி

நிகழ்த்தவு மவர்க்கொன் றில்லை!

காயிற நிலாவை நோக்கிக்

கடுஞ்சினம் பெருகி நன்றாய்

நாயது குலைத்த தொக்கும்!

ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**வாயது மட்டு மிஞ்சி** — நாவடக்கம் இன்றி, **பெரியோர்** — அறிவிலும் அகவையிலும் மூத்தோர்.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள் :**

'நெறியால் உணராது நீர்மையும் இன்றிச்

சிறியார் எளியரால் என்று, — பெரியாரைத்

தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்

திங்களை நாய்குரைத் தற்று'

'கீழ் மக்கள் செய்கை', பழமொழி நானூறு — 107

'அந்தணரை நல்லவரைப் பரமசிவ னடியவரை
யகந்தை யாலோர்
நிந்தனைசொன் னாலுமென்ன வைதாலு
மென்னவதி
னிஷேத முண்டோ?
சுந்தரர்க்குத் தூதுசென்ற தண்டலைநீ ணெறி-
யாரே!
துலங்கும் பூர்ண
சந்திரனைப் பார்த்துநின்று நாய்குரைத்த
போதிலென்ன
தாழ்ச்சி தானே!'

*— தண்டலையார் சதகம் — 32*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1827*

*'வாகுள்ள பெரியோர் தம்மை*
*நேயமா யிகழ்ச்சி பேசில்*
*நிந்தனை யவர்க்கொன் றில்லை!*
*காயிற நிலாவைப் பார்த்து*
*கருகருத் துறுமி நன்றாய்*
*ஞாயிதுகு கூடத்த தொக்கும்'*

## 12

மேட்டினில் விரைத்த செந்நெல்
விளைந்தது கதிராய் வாங்கிச்
சூட்டின்மேல் போரே றாது!
துர்ச்சன னுதவி யெல்லாம்
வீட்டிமை யெல்லாஞ் சும்மா
வெறும்பிலுக் காகும் சேத்தில்
நாட்டிய கம்ப மையா!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**விரைத்த** (பேச்சுவழக்குச் சொல்) — விதைத்த, **துர்ச்சனன்** — தீயவன். **பிலுக்கு** — பகட்டு, **சேத்தில்** (பேச்சுவழக்குச் சொல்) — சேற்றில்.

## ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:

'மேட்டுக்கே விரைத்தவிரை வீணருக்கே செய்தநன்றி
மேயும் பட்டி
மாட்டுக்கே கொடுத்தவிலை பரத்தையர்க்கே தேடியிட்ட
வண்மை யெல்லாம்
பாட்டுக்கே யருள்புரியுந் தண்டலையார் வீதிதொறும்
பரப்பி டாமல்
காட்டுக்கே யெறித்தநிலாக் கானதுக்கே பெய்தமழை
கடுக்குங் காணே'

— *தண்டலையார் சதகம் — 13*

**பழமொழிகள்:**

*மேட்டு நிலத்தை உழுதவனும் கெட்டான்;*
*மேட்டுப் பிள்ளையைப் பெற்றவனும் கெட்டான்'* **19166**
*வெறும் பிலுக்கு வண்ணான் மாற்று* **20883**
*மேல்மினுக்கியைக் கட்டினவனும் மேட்டுப்*
*புன்செய்யை உழுதவனும் கெட்டான்.* **19193**

— *தமிழ்ப்பழமொழிகள்*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*

*'வெறும்பிலுக் காகும் சொன்னால்'*

*சுவடி எண்; 1827*

'விதத்துடன் கதிர்வி ளைந்து'
'துர்ச்சனந் தனங்கொப் பாமோ' வீட்டிமை யாகப் பேசி
வெறும்பிலுக் காகச் சேற்றில்'

## 13

இன்பமில் லாத மாதர்
இடத்தில்சஞ் சாரம் பார்க்கில்
தென்புள்ள குணமாய் மாதர்
திருமுகங் கண்டால் போதும்!
அன்புடன் குணமில் லாதார்
அறுசுவை அமுதிட் டாலும்
ரம்பைய மாகா தையா!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**மாதர்** — பெண்டிர், **அறுசுவை** — கைப்பு, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, என்னும் ஆறு வகையான சுவைகள். ரம்பையம் — இனிமை, சுவை, மனநிறைவளிக்கும் தன்மை.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்.

— 'விருந்தோம்பல்' திருக்குறள் — 89

கழுநீருட் காரட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்; — விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினும்
மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

— 'நட்பாராய்தல்' நாலடியார் — 217

வழங்காத் துறைஇழிந்து நீர்ப்போக்கும் ஒப்ப
விழைவிலாப் பெண்டிர்தோள் சேர்வும் — உழந்து
விருந்தினராய் வேற்றூர் புகலும்இம் மூன்றும்
அருந்துயரம் காட்டும் நெறி.

— திரிகடுகம் — 6

........................ ..............குற்றம்
தமர்அல்லார் கையகத்து ஊண்.

— நான்மணிக்கடிகை — 93

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே! —
வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பில்லாள் இட்ட அமுது.

— ஔவையார் தனிப்பாடல்கள் — 13

'உண்ணீர்உண் ணீர்என்று ஊட்டாதார்
தம்மனையில்
உண்ணாமை கோடிபெறும்'

— ஔவையார் தனிப்பாடல்கள் — 41

'உள்ளன் பிலாதபேர் தித்திக்க வேபேசி
யுறவாடு முறவு முறவோ?
உபசரித் தன்புடன் பரிமாறி டாதசோ
றுண்டவர்க் கன்னமா மோ?
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்பமா மோ?

— அறப்பளீசுர சதகம் — 26

'இன்சொல் காணா விருந்து'

—குமரேச சதகம் — 29

'கடுகடுத் தாயிரஞ் செய்குவதி லின்சொலாற்
களிகொண் டழைத்த னன்று'

— குமரேச சதகம் — 52

'பரிவாக வுபசார மில்லா விருந்தினிற்
பட்டினி யிருக்கை நன்று.

......................................................................

......................................................................

சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலிற்
சன்னியா சித்த னன்று!'

— குமரேச சதகம் — 81

'செய்யகுண வின்பரச மில்லாத மங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கி லென்ன?

—திருவேங்கட சதகம் — 20

'பொற்குடையும் பொற்றுகிலும் பொற்பணியுங்
கொடுப்பதென்ன
பொருளோ வென்று
நற்கமல முகமலர்ந்தே யுபசார மிக்கவின்சொ
ணடத்த னன்றே
கற்கரையு மொழிபாகர் தண்டலையார்
வளநாட்டிற்
கரும்பின் வேய்ந்த
சர்க்கரையின் பந்தலிலே தேன்மாரி
பொழிந்துவிடுந்
தன்மை தானே'

— தண்டலையார் சதகம் — 10

'பரியாம லிடுஞ்சோறு மூமைகண்ட கனவுமொன்று'

— தண்டலையார் சதகம் — 26

ஒப்புடன் முகம லர்ந்தே
யுபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலு
முண்பதே யமிர்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம்
முகங்கடுத் திடுவா ராகின்
கப்பிய பசியின் ஓடக்
கடும்பசி யாகுந் தானே!'

—விவேகசிந்தாமணி — 4

பாடவேறுபாடு:

சுவடி எண்: 1827

'இன்பமில் லாத பெண்கள்

.............................

—.........–குணத்து மாந்தர்

... ...........................

அன்புள்ள குணமில் லாதாள்

.........................

நம்பவும் போகா தய்யா'

## 14

மட்டிப்பால் திறந்தார் நெஞ்சில்
வருத்தமில் லாரை வைத்துத்
தட்டியே கொட்டிச் சொல்லத்
தானது முழுதும் போச்சு!
கொட்டிநற் புத்தி யுள்ளான்
கிருகைதா னுப்புச் சிந்து
ரட்டிப்புப் போலே சேரும்!
ராசகோ பால மாலை!

அருஞ்சொற்பொருள்:

**மட்டி** — மூடன், ஒழுங்கின்மை. **கிருகை** — கிரிகை செய்கை, **ரட்டிப்பு** — இரட்டிப்பு — இருமடங்காகுதல்.

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*

'மட்டிப்பாத் திரத்து நெஞ்சில்'

'கிருகைதா னுளப்புச் சிந்து'

## 15

பட்டது கிழிந்து போனால்
பாணருக் காகும்! வேந்தர்
கெட்டது மெலிந்து போனால்
கீர்த்தியும் புகழும் போமோ?
தட்டது கெட்டால் குப்பை
தன்னிலே புதையுண் டாமோ?
ரத்னம் ஒளிபோ காது!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**பாணர்** — பாடுங்குலத்தார்; தையற்காரர், **கீர்த்தி** — சீர்த்தி — மிகுபுகழ். **ரத்னம்** — ரத்தினம் — மணி வகைகளுள் ஒன்று.

## ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:

'நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வ்ட்குபவோ? — வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல்'

— *பழமொழி நானூறு* — 204

'வீதிபெறு குப்பையி லிருந்தாலு மாணிக்க
மெய்ம்மழுங் காதொளிவிடும்'

— *திருவேங்கட சதகம்* — 91

'குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஒரூர் நண்ணினும் நண்ணுவர்'

— *அதிவீரராம பாண்டியர் வெற்றிவேற்கை* — 50

**உறழ்ந்து செல்லும் கருத்து:**

*'பொன்னொடு மணியுண் டானாற்*
*புலையனுங் கிளைஞ ரென்று*
*தன்னையும் புகழ்ந்து கொண்டு*
*சாதியின் மணமுஞ் செய்வர்*
*மன்னரா யிருந்த பேர்கள்*
*வகைகெட்டுப் போவா ராயின்*
*பின்னையு மாரோ வென்று*
*பேசுவா ரேசு வாரே!'*

*— விவேகசிந்தாமணி — 25*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*
*'கெட்டவர் மெலிந்து,'*
*'தட்டது கெட்டுக் குப்பை'*
*'ரற்றின மொளிபோ காது'.*

## 16

**தெண்டினையில் லாத வேலை**
**சீருபோ றாத தம்பி**
**கொண்டவர்க் கடங்காப் பெண்டிர்**
**கூர்மையில் லாத பிள்ளை**
**வண்டர்க ளளந்த நாழி**
**வறுமையில் செருக்கும் செல்வம்**
**நண்டதைப் போல வாழ்க்கை!**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள்:**

**தெண்டினை** — *தண்டனை,* **கொண்டவர்** — *கணவன்* **வண்டர்** — *அரசனுக்கு நாழிகையறிவிக்குங் கடிகையார்; வீரர்;* **வண்டன்** — *தீயோன்,* **நாழி** — *அளக்கும் ஒரு படி.*

## ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்

**பழமொழி:**

"அளந்த நாழி கொண்டு அளப்பான்"

— தமிழ்ப் பழமொழிகள்—1446

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1827

'தெண்டனை யில்லா வேலை
சீருபோ றான வாழ்க்கை
.....................................................
.....................................................
வண்டர்க ளிணக்க மில்லா
வறுமையோர் வாழ் வதல்லாம்
றண்டளந் திட்ட நாளில்'

### 17

**வேதமில் லாத பாப்பு**
**வித்தையில் லாத பிள்ளை**
**சாதமில் லாத பூசை**
**தந்தியில் லாத வீணை**
**நீதமில் லாத ஊரு**
**நேரிழை யிலாத மாடம்**
**நாதமில் லாத சங்காம்!**
**ராசகோ பால மாலை!***

**அருஞ்சொற்பொருள்:**

**வேதம்** — இந்து சமயிகளுக்குரிய சுருதி; சமய முதனூல் மறை அறிவு, **பாப்பு** — பார்ப்பனன், **வித்தை** — கல்வி, அறிவு **சாதம்** — சோறு, உணவு, **தந்தி** — வீணை நரம்பு, **நீதம்** —

* தலையாகு எதுகை பெற்ற பாடல்.

நீதி, **நேரிழை** — பெண் (மனைவி), **மாடம்** — உப்பரிகையுள்ள வீடு, குடிசை, **நாதம்** — சத்தம்; ஒலி; வாச்சிய ஓசை.

## ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:

**வேதமில்லாத பாப்பு:**

'அந்தணர்க் குயர்வேதமே பெலம்'

— குமரேச சதகம் — 25

'வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்'

— அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கை — 4

காலையும் மாலையும் நான்மறை ஓதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே.

— அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கை — 64

**வித்தையில்லாத பிள்ளை:**

'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே;
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்,
சிறப்பின் பாலால் தாயும்மனம் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்,
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடை யோன்ஆறு அரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே!'

— புறநானூறு — 183

'கண்ணுடையர் என்பவர் கற்றோர்'

— 'கல்வி' குறள் — 393

'கேடில் விழுச்செல்வம் கல்வி'

— 'கல்வி', குறள் — 400

'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்'

— 'கல்லாமை' குறள் — 410

'குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல — நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.'

'இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து'

— 'பொருட்பால், கல்வி', நாலடியார் — 131, 132

'வாய்நன்(கு) அமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை உண்ணாக் குழவியும் — சேய்மரபில்
கல்விமாண்பு இல்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார்.

— திரிகடுகம் — 85

'இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்'

— நான்மணிக்கடிகை — 93

'வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும்'

— அறப்பளீசுர சதகம் — 13

'வித்தை விரும்பு'

— ஔவையார் ஆத்திசூடி — 101

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'

— உலகநீதி — 1

'கற்கை நன்றே கற்கை நன்றே;
பிச்சை புகினும் கற்கை நன்றே!'

— அதிவீரராமபாண்டியரின் வெற்றிவேற்கை — 35

**தந்தியில்லாத வீணை:**

'சந்திர னில்லா வானந்
தாமரை யில்லாப் பொய்கை
மந்திரி யில்லா வேந்தன்
மதகரி யில்லாச் சேனை
சுந்தரப் புலவ ரில்லாத்
தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திக ளில்லா வீணை
ஸ்தனமிலா மங்கை போலாம்.

— விவேகசிந்தாமணி — 57

**நீதமில்லாத ஊரு**

'... ... ... ... ... ... ... ... ... மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'

— புறநானூறு — 55

**நேரிழை யிலாத மாடம்:**

'மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பாய்
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னாம்? — விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்
காண்டற் கரியதோர் காடு.

— 'பொருட்பால், பன்னெறி', நாலடியார் — 361

'மனைக்குஆக்கம் மாண்ட மகளிர்'

— நான்மணிக்கடிகை — 20

'மனைக்குப்பாழ் வாள்நுதல் இன்மை'

— நான்மணிக்கடிகை — 22

' ... ... ... ... ... ... ... ... ... பாழ் ஒக்கும்
பண்புடையாள் இல்லா மனை'

— நான்மணிக்கடிகை — 100

'ஏந்திழை இலாஇல் வாழ்க்கை'

(இருந்தும் பயனில்லாதவை)

— கயிலாசநாதர் சதகம் — 34

'பைந்தொடி யிலாத மனை'

— திருவேங்கட சதகம் — 62

'நீறில்லா நெற்றிபாழ்; நெய்இல்லா உண்டிபாழ்;
ஆறில்லா ஊருக் கழகுபாழ்; — மாறில்
உடன்பிறப்பு இல்லா உடம்புபாழ்; பாழே,
மடக்கொடி இல்லா மனை.'

— ஔவையார் நல்வழி — 24

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1827

'வேதமில் லாத பாப்பான்', 'நேரிழை யில்லாத வீடு',
'நாதமில் லாத சங்கு'

## 18

கூடிய படையில் தானே
கொடும்பகை முடிந்த போது
தேடிய சமரி லாண்மை
செய்வது மொருவ னாகும்!
கோடியில் கோடி மீன்கள்
குதித்துவா னுதித்திட் டாலும்
நாடிய மதிக்கொப் பாமோ?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**சமர்** — போர், **மதி** — சந்திரன்

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள் :**

'ஆயிரவ ரானும் அறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்
பாய்இருள் நீக்கும் மதியம்போல் பல்மீனும்
காய்கலா ஆகும் நிலா.'

— பழமொழி நானூறு — 27

'தாரகைக ளொருகோடி வானத் திருக்கினுஞ்
சந்திரற் கீடாகு மோ?'
— குமரேச சதகம் — 53

**பாட வேறுபாடு:**

சுவடி எண்; 1708,
'குதித்துட னுதித்திட் டாலும்'
சுவடி எண்: 1827
'கூடிய படையில் தானே
சமர்செய்து முடிக்கும் போது
...............................................
செய்பவ னொருவ னாகும்
கூடிய கோடி மீன்கள்
குருவுட னுதித்திட் டாலும்'

## 19

**நீடிய விதியில் லாமல்**
**நிறைந்துயிர் போகு மென்னும்**
**ஆடிய விழுதில் தூங்கும்**
**அயன்விதிக் கஞ்சி யோர்வன்**
**போடிசெய் தொளித்தோன் மாண்டான்!**
**பொன்றிட நின்றான் மீண்டான்!**
**நாடிய விதிவி டாது!**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள்:**

**நீடிய** — நெடுங்காலம் இருக்கக்கூடிய, **அயன்** — பிரமன், **ஓர்வன்** — ஒருவன், **போடி** — எதிரிடை, **பொன்றிட** — பொன்றுதல் — அழிதல்; இறத்தல்.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள் :**

**'பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம'**
— 'ஊழ்' குறள் — 376

'வருந்தி அழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன, 'போமின்' என்றால் போகா—
இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்'
'..................நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
எழுதாப் படிவருமோ?'

— *பட்டினத்தார் பொது —121*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*
*'நிறைந்துயிர் போகு வென்றும்'*
*சுவடி எண்: 1827*
*'பேடியாய் ஒளிந்தான் மாண்டான்*
*பேரறி வாளன் மீண்டான்'*
*'நீடிய விதியி னாலே*
*நினதுயிர் போகு தென்று*
*ஆடிய விழுதில் தொங்கி*
*அயன்விதிக் கஞ்சி யோர்வன்'*

## 20

வேகத்தால் சிந்தை நொந்து
மெய்சலித் தாலு மென்ன?
யோகத்தின் படியல் லாது
ஒன்றது மேறா தையா!
மாகிரத் நம்சு மந்த
வாய்வுபட் சணமே செய்யும்
நாகத்தின் கூரு கண்டீர்!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**சிந்தை** — மனம், **மெய்** — உடல், **யோகம்** — நற்பேறு, உயர்ச்சி, **ரத்நம்** — இரத்தினம் — மணி வகைகளுள் ஒன்று, **பட்சணம்** — உண்கை; விலங்கின் உணவு, **நாகம்** — பாம்பு.

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: *1708*

'மெய்சலித் தா லு மெந்த'

சுவடி எண்: *1709*

'செய்த நாகத்தின்'

சுவடி எண்: *1827*

'யோகத்தின் செயலல் லாமல்
ஒன்றது மாகா தய்யா
சோகத்தா விருந்தென் னாளும்
சோதியை தெரிசித் தோ...
னாகத்திற் பெரியோ ராவார்'

## 21

**முன்னொரு வேடன் றன்னை**
**முடுக்கிய வேங்கைக் கஞ்சி**
**உன்னிய மரத்தி லேற**
**உயிர்பெருங் குரங்கு காக்கத்**
**தின்னவே குரங்கை யெய்த**
**தீவினை யொப்பாய்ச் செய்த**
**நன்னெறி நன்றி யெண்ணார்!**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள்:**

**முடுக்கிய** — துரத்திய, **வேங்கை** — புலி.

இக்கதை பஞ்சதந்திரத்திலும் வேறு நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.

**ஒப்புமைப் பாடல்கள் பகுதிகள்:**

ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே..............................'

— *புறநானூறு — 34*

'நன்றி மறப்பது நன்றன்று'

— *குறள் — 108*

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

— *குறள் — 110*

'சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்'

— *உலகநீதி — 8*

'வல்லியந் தனைக்கண் டஞ்சி
மரந்தனி லேறும் வேடன்;
கொல்லிய பசியைத் தீர்த்து
இரட்சித்த குரங்கைக் கொன்றான்,
நல்லவன் றனக்குச் செய்த
நலமது மிக்க தாகும்.
புல்லர்க டமக்குச் செய்தா
லுயிர்தனைப் போக்கு வாரே!'

— *விவேகசிந்தாமணி — 95*

**கதைப்பகுதி:**

"... பாவகாரி என்னும் வேடன் வேட்டைக்குச் சென்றான். அங்கே அவனை ஒரு புலி துரத்தியது. அஞ்சி ஓடிய அவன் ஒரு விருட்சத்திலே ஏறினான். அங்கே இருந்த ஒரு பெண் குரங்கு இவனைப் பார்த்து 'அஞ்சாதே!' என்று கூறி அவனுக்கு அடைக்கலம் கொடுத்து வேடனை மடியில் தூங்கச் சொல்லி வைத்திருந்தது. புலி கீழே நின்று குரங்கைப் பார்த்து, 'நீயும் நம் இனம் ஒழித்து வேறல்ல. அவனோ மனிதன். மனிதர் செய்ந்நன்றி அறியார்கள். இவனைக் கீழே தள்ளு. உனக்கு உபகாரத்திற்குப் பிரதி உபகாரம் பண்ணு கிறேன்' என்று கூறியது. அப்போது குரங்கு மனுஷர் செய்ந் நன்றி அறியாதபடி சொல் என்ன, புலி சொல்வது:

... ............................................................ . ............

..............................................................................

ஆதலால் மனுஷர் செய்ந்நன்றியறியார்கள். நீ இவனைத் தள்ளிவிடு என்ன, குரங்கு புலியைப் பார்த்து என்னை அடைந்த வேடனை விடுவதில்லை. புலிகளோடு உறவும் இல்லை என்ன, அது எங்ஙனே என்று புலிகேட்கக் குரங்கு சொல்லும்.

............................ .......... ....................................

.............................................................. ........................

அதனால் புலி செய்ந்நன்றி அறியாது. புலிக்கு உபகாரம் உண்டோ? என்று குரங்கு சொல்லியது.

வேடனும் குரங்கின் மடியில்ருந்து எழுந்திருந்தான். குரங்கு வேடனைப் பார்த்து எனக்கு நித்திரை வருகிறது. புலி உன்னை வேறுவகையிலே பேதலிக்க வைக்கும். அதுகேட்டு விஷசாதகம் பண்ணாதே என்று சொல்லி வேடன் மடியிலே குரங்கு தூங்கியது. அவ்வளவிலே ஒரு நரிவந்து எம்பெருமானே! இங்கு எழுந்தருளின விவரம் எது? என்ன, இந்தக் குரங்கிற்கும் எனக்கும் மித்துரு பாந்தகமான படியினாலே வந்தேன் என்று புலிசொல்லக்கேட்டு நரிசொல்வது.

……………………………………………………………………………………
……………………………………………………………………………………

என்று நரிசொல்லிப்போனது.

அதன்பின்பு புலி வேடனைப் பார்த்து உன் மடியிலே கிடக்கிற குரங்கைக் தள்ளிவிடு உன்னை விடுவிக்கிறேன் என்று சொல்லியது. அதற்கு ஒப்பி நன்றியறியா வேடன் குரங்கைத் தள்ளி விட்டான். குரங்கு கீழே வந்து விழுந்தது. விழுந்த அளவிலே புலிவந்து பிடித்துக்கொண்டு கொல்ல முனைந்தது. அதைக் கண்டு குரங்கு நகைத்தது. புலி குரங்கைப் பார்த்து நீ சாகும் நிலையில் என் கையில் அகப்பட்டு இருந்தும் நகைப்பானேன்? என்று கேட்டது. அதற்குக் குரங்கு வாராய் புலியே? நீ என்னிலும் பலவானாய் இருந்தும் என்னைப் பிடிக்க இத்தனை ஆர்ப்பாட்டம் வேண்டுமோ? இம்மட்டோ புலிகளின் பலம் என்று சொல்ல அதைக் கேட்டு புலி மலைத்து பிடி நழுவப் பார்த்து நின்றது.

புலி அசரும் தருணம் பார்த்துக் குரங்கு கொம்பைப் பார்த்து தாண்டிப் பிடித்து உசர ஏறி வேடனை அடைந்தது. வேடன் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து, தானும் நித்திரையிலே பிரண்டு விழுந்ததாய் எண்ணியது. யாவன் ஒருவனுக்கும் பிராண விபத்து வந்தாலும் குழம்பாதே விசாரித்து தப்ப வேண்டும். அது எதுபோல என்னில் புலியின் வாய் அகப்பட்ட குரங்கு, உபாயத்தாலே பிழைத்தது போல என்ற வாறு.

அவ்வளவிலே வேடனும் மெத்தவும் பயந்து ஒடுங்கிப் போயிருந்தான். அவனைக் குரங்கு பார்த்து 'நீ அஞ்சாதே,' உன் மேல் குறையில்லை. நான் தூங்கித் தடுமாறி விழுந்தேன் என்று கூறி அவனைத் தேற்றியது. புலியும் இனி நாம் காத்திருப்பதில் பிரயோசனம் இல்லை என்று புறப்பட்டுப் போனது.

புலிபோன பின்பு குரங்கு வேடனைப் பார்த்து 'நீ என் குட்டியை வைத்துக் கொண்டிரு. நான்போய் காய், பழம் ஆதிகள் கொண்டு வருகிறேன். நீ மெத்த களைப்பிலே இருக்

கிறாய்' என்று கூறி அவனிடம் குட்டியைக் கொடுத்து விட்டு நெடுந்தொலை சென்று காயும் கனியும் பறித்துவரும் அளவில் வேடன் நெருப்பை வளர்த்து குட்டியினைச் சுட்டுத்தின்று புறப்பட்டுப் போக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது குரங்கு நல்ல காய் கனிகளும், தேனும் தாமரையிலையிலே தண்ணீரும் கொண்டுவந்து வேடனைப் பசிதீர்த்து தன் குட்டிகளைத் தேடியது. காணாதபடியால் இவன் பசியின் கொடுமையால் குட்டியைத் தின்றிருப்பான் என்று மனதிலே எண்ணி வேடனைப் பார்த்து 'பயப்படாதே உன்னிலும் சிறியரோ எம்மக்கள். உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்' என்று அவன் பயம் தேற்றியது.

பின் உன்னுடைய ஊருக்குப் போகையில் வழியிலே புலி உன்னைத் தொடராமல் இருக்க நான் துணையாகக் கூட வருகிறேன். நீ பயப்படாதே என்று அவனை அழைத்துக் கொண்டு காடும் செடியும் கொடியும் கடக்கவிட்டு மீண்டது வேடன் நாம் நேற்றே மீண்டோம் இல்லை. வெறுங்கையுடன். ஊருக்குப் போகலாமோ என்று குரங்கை முன் கம்பியாலே கொன்று உரித்து தோலெடுத்துக் கொண்டு போகும் அளவில் புலி எதிரே வந்து வேடனைப் பிடித்துக்கொண்டது. வேடனும் நடுநடுங்கி நின்றான். அவனைப் பார்த்துப் புலி சொல்லியது செம்மாக்களைக் கொன்றாரையும் செய்ந்நன்றி குன்றினாரையும், பஞ்சபாதகம் பண்ணினாரையும் தீண்டவும் பார்க்கவும் தின்னவும் கூடாது. தோஷம் என்று புராண வேதங்களிலே எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உன்னைத் தின்னேன். உன் முகத்திலே கூட விழிக்கக் கூடாது நீ போ. போய்விடு என்று புலி அவனை விரட்டிவிட்டுச் சென்றது.

அந்த நன்றியறியாத வேடனைப் போல்...''

— பஞ்சதந்திர வசனம் பக் — 1724

**பாட வேறுபாடு:**

சுவடி எண்: 1708

'குரங்குங் காக்க', 'யொப்பாஞ் செய்த'

## 22

துர்க்குணம் படைத்த வீரர்
துரைத்தனம் செலுத்தும் நாட்டில்
திக்கவே யளித்திட் டாலும்
செகுடனுக் கூது சங்காம்!
மிக்கநல் லறிவு கேளிர்
விசாரனை அரசர் நீதி
நற்கணை விசையோ டொக்கும்!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**துர்க்குணம்** — *தீய குணம்*, **துரைத்தனம்** — *அரசாங்கம்*, **செகுடன்** — *செவிடன்*, **கேளிர்** — *உறவினர், தோழர்*, **விசாரணை** — *ஆராய்ச்சி, நியாய விசாரணை*, **கணை** — *அம்பு*

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்**

'பரியாம லிடுஞ்சோறு மூணமகண்ட கனவு மொன்று
பரிசி லீயான்
அரிதான செந்தமிழி னருள்சிறிது மில்லாதா
னறிவு மேதான்
கரிகாலன் பூசைபுரி தண்டலைநீ ணெறியாரே
கீதித்த வோசை
தெரியாத செவிடன்கா தினிற்சங்கு குறித் ததெனச்
செப்ப லாமே'

*— தண்டலையார் சதகம் — 26*

**பாடவேறுபாடு:**

சுவடி எண். 1708
'மிக்கநல் லறிவு கேள்வி'

## 23

திண்மையே புரிந்த வீரன்
　　திருதராட் டிதன்கு மாரன்
பொன்மயம் சிறந்த செங்கோல்
　　புகழது நிலைத்து தோசொல்?
தன்மமே செயமென் றெண்ணித்
　　தருமருந் தவறா நின்றார்!
நன்மையொன் றழிவு மில்லை!
　　ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**திண்மை** — *திமை*, **திருதராட்டிரன் குமாரன்** · *துரியோதனன்*, **தன்மம்** — *தர்மம்*, **செயம்** — *வெற்றி.*

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

**'தன்மமே செயம்'**

''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
　　தருமமறு படிவெல்லும்' எனுமி யற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
　　வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலும் காண்போம் இன்று
　　கட்டுண்டோம் பொறுத்திருப்போம்; காலம் மாறும்
தருமத்தை யப்போது வெல்லக் காண்போம்!
　　தனுவுண்டு காண்டீவ மதன்பேர் என்றான்.

— *பாரதியாரின் பாஞ்சாலிசபதம்* — *79*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708 'தன்னிதந் தவறா நின்ற'*

*சுவடி எண்: 1827*

'தின்மையே செய்து வாழ்ந்த / திரிதராட் டிதன்று மாரன்
புன்மையாய்ச் சேர்ந்த செங்கோல் / புகழ்பெற நிலைத்த துண்டோ
தர்மமே செயமென் றெண்ணித் / தருமருந் தவமி ருந்தார்
நன்மைக்கோ ரழிவு மில்லை'

## 24

**கற்புள்ள மாதர்க் கன்பு**
**கணவனே அழகு! மிக்க**
**விற்புரு சிலையில் மின்னார்**
**வேசியர்க் கழகு மஞ்சள்!**
**அற்பருக் கழகு பொய்சொல்!**
**அரிவையர்க் கழகு மெய்சொல்!**
**நற்பதிக் கழகு வேந்தர்!**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள்:**

**மாதர்** — பெண்டிர், **சிலை** — வில், **வேசியர்** — பொருட் பெண்டிர், **நற்பதி** — நல்ல நாடு.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

''நெல்லும் உயிரன்றே! நீரும் உயிரன்றே!
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'
— புறநானூறு — 186

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு!
— குறள் — 299

'காவல் தானே பாவையர்க் கழகு'
— ஔவையார் கொன்றை வேந்தன் — 15

'மன்னர்க்கு அழகு செங்கோல் முறைமை'
'குலமகட்கு அழகுதன் கொழுநனைப் பேணுதல்'
'விலைமகட்கு அழகுதன் மேனி மினுக்குதல்'
அறிஞர்க் கழகு கற்றுணர்ந்து அடங்கல்'
—5, 12,13,14, அதிவீரராமபாண்டியரின் வெற்றிவேற்கை

'கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே!'
— அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கை — 63

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1709
'அறிவுள்ளோர்க் கழகு மெய்சொல்'
(இதுவே சிறந்த பாடம் எனலாம்.)

## 25

ஆட்டத்துக் கழகு பந்தம்!
அரிவையர்க் கழகு கொங்கை!
வீட்டுக்கு அழகு தீபம்!
வேந்தர்க்கு அழகு யானை!
பாட்டுக்கு அழகு சந்தம்!
பட்சியி லழகு கிள்ளை!
நாட்டுக்கு அழகு மாரி!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**ஆட்டம்** — விளையாட்டு, **பந்தம்** — பந்து. **அரிவை** — இருபது முதல் இருபத்தைந்து அகவை வரை உள்ள பெண், **கொங்கை** — மார்பகம், **தீபம்** — விளக்கு. **வேந்தர்** — அரசர் **சந்தம்** — வண்ணம்; ஓசை, **பட்சி** — பறவை, **கிள்ளை** — கிளி, **மாரி** — மழை

**ஒப்புமைப்பாடல்கள், பகுதிகள்:**

**பாட்டுக்கு அழகு சந்தம்**

'பழுத்துள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்'

*'பாடலியல்பு', குமரேச சதகம் — 86*

'பாடலில்லா வோசை'

*— திருவேங்கட சதகம் — 62*

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1827

'ஆட்டினுக் கழகு பந்தம்
........ ........ ........ ........
வீட்டினுக் கழகு .................... –
வேந்தருக் கழகு செங்கோல்
பாட்டினுக் ....................................
பாவலர்க் கழகு ஞானம்
நாட்டினுக் ...................................'

## 26

உற்பன மாக நல்ல
உயர்குரு மொழியுங் கேள்வி
அற்பருக் குறைத்திட் டாலும்
அவரவர் குணமே காட்டும்!
வெற்புறு நிலத்தில் சம்பா
விரைதனைத் தெளித்திட் டாலும்
நற்பயிர் விளைவா காது!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**உற்பனம்**— *உயர்வு,* **குரு** — *ஆசிரியர், வழிகாட்டி,* **அற்பர்** — *கீழ் மக்கள்,* **வெற்புறு** — *பாறைகள் நிறைந்த,* **சம்பா** — *ஓர் உயர்ந்த நெல் வகை,* **விரை** — *விதை*

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

'மேட்டுக்கே விரைத்த விரை'

*— தண்டலையார் சதகம் — 13*

**பழமொழி:**

களர்நிலத்திலே சம்பா விளையுமோ?

— தமிழ்ப்பழமொழிகள் — 7477

**பாடவேறுபாடு:**

சுவடி எண் 1827

'உற்பன மாக மிக்க

உயர்ந்திடு ரூபந் தன்னை

அற்பருக் குரைசெய் தாலு

— ........................................ —

.............. விளையு மோசொல்!'

## 27

பொக்கிஷம் பொருளும் தூரம்

போதவே அன்ன சொர்னம்

கைக்கினி தாக மெத்த

கனக்கவே இருந்தா லென்ன?

மிக்கமுக் கனிதேன் சிந்தி

விதத்துட னரகில் வீழ்ந்தால்

நக்கவோ எடுக்க வோதான்?

ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**பொக்கிஷம்**—செல்வக் களஞ்சியம், **சொர்னம்**—சொர்ணம்—பொன், **முக்கனி** — மா, பலா, வாழை என்னும் மூவகைப் பழங்கள், **நரகு** — மலம்.

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1708

பொருளுந் தாறம்'

*சுவடி எண்: 1827*

'பொக்கிஷம் பொருள்ப தார்த்தம்

.......... ............ ...... .................

சக்கிஷற்கிய் யாறன் கய்யில்

கனக்கலே யிருந்திட் டாலும்

மிக்கநற் கனிதேன் சிந்தி

வித்துடன் நரகில் வீழ்ந்தால்

நக்கவோ எடுக்க வோசொல்

ராசகோ பால மாலெ'

## 28

ஆச்சிதம் பொருள்ந மக்கு

ஆமெனத் தேடி வைத்தால்

தேச்சிது விடுநாள் வந்தால்

சிந்திடக் காப்ப துண்டோ?

நீச்சது கடலுக் குள்ளே

நிலைநின்ற யிலங்கை மூதூர்

ராச்சதன் வாழ்வு மெங்கே?

ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**விடுநாள்** — இறக்கும்நாள், **மூதூர்** — தொன்மையான ஊர், **ராச்சதன்** — அரக்கன், **இலங்கை மூதூர் ராச்சதன்** — — இராவணன்.

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708,*

'ஆட்சிதம்', 'சிந்திடா காப்ப துண்டோ', 'தேட்சது', 'நீட்சது' 'றாட்சதன்'

## 29

தானென நின்றான் புத்தன்
　　சூழ்ந்தனன் மதத்தைத் தானே!
மானினந் தரித்தோன் மைந்தன்
　　வானங்க ளேத்தி விட்டான்!
வானமும் புவியைத் தாங்க
　　வல்லமை யிருந்தா லுந்தான்
நானெனும் ஆண்மை யாமோ?
　　ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**மைந்தன்** — *தந்தைக்கு வலிமை சேர்க்கும் மகன்,* **புவி** — *பூமி,* **'நான்'** — *எல்லாவற்றிற்கும் தானே காரணம் என்னும் மன உணர்வு.*

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள் :**

"நாயனை அறிந்தி டாமல்
　　நானென்னும் ஆண்மை யாலே
ஆயனில் லாத காலி
　　யாகிநீ அலைய லுற்றாய்"

*கணபதி சித்தர் — 51*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*

*'வாணியம் புவியைத்'*

*சுவடி எண்: 1827*

*'தானென நின்ற பொல்லாச் / சமணர்கள் மதத்தைத் தானே*
*மானிலந் தேறும் யந்தன் / வானங்கழு வேற்றி வீட்டான்*
*வானமும் புவியுந் தாங்க'*

## 30

பொக்கிஷம் பொருளைத் தேடிப்
புதைத்துப்பின் தனக்குண் ணாமல்
எக்கிய குடல்க ளோடே
யிரந்துண்ணு மாந்தர் வாழ்க்கை
திக்கவே மாரி பெய்ந்து
தெருவெல்லாம் பெருகி ஓடி
நக்கிய குக்க லாகும்!
ராசகோ பால மாலை!

அருஞ்சொற்பொருள் :

**பொக்கிஷம்** — *செல்வக் களஞ்சியம்*, **மாந்தர்** — *மனிதர்*, **மாரி** — *மழை*. **குக்கல்** — *நாய்*.

**ஒப்புமைப் பகுதிகள், பாடல்கள்:**

'வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது''.

— *'ஊழ்', குறள் — 377*

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்'

— *'ஈகை' குறள் — 228*

'உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அ,ஆ
இழந்தான்என் றெண்ணப் படும்.'
'உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார் — கொடாஅது
வைத்தீட்டி னார்இழப்பர், வான்தோய்
மலைநாட!
உய்த்தீட்டும் தேனீக் கரி'.

*'செல்வம் நிலையாமை' நாலடியார் —9, 10*

'அருளினை நெஞ்சத்து அடைகொடா தானும்
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்தின்னா சொல்கிற் பானும்இம் மூவர்
பிறந்தும் பிறந்திலா தார்'.

— திரிகடுகம் — 90

'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்து
கேடுகெட்ட மானிடரே! கேளுங்கள்!-கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு) யாரே அனுபவிப்பார்
பாவிகாள்! அந்தப் பணம்?'

— ஔவையார் நல்வழி 22

'நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்
நடுவன் வரும்போது நாடி வருமோ?
கூடுபோன பின்பவற்றால் கொள்பயன் என்னோ?
கூத்தன்பதங் குறித்துநின்று ஆடு பாம்பே!'

பாம்பட்டி சித்தர், பாடல் எண்: 40

'மலைபோன்ற செம்பொற்குவை வைத்தி ருப்பவர்
மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ?'

— பாம்பாட்டி சித்தர் — 44

'பொருடனைத் தேடிப் பாரிற்
புதைக்கின்ற புத்தி போல்...'

— கணபதி சித்தர் — 79

'வறிதிற் புதைத்துவைத்(து) ஈயாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்'

— அறப்பளீசுர சதகம் — 7

'தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்'

— உலகநீதி — 3

**பழமொழிகள்:**

ஆற்றில் நிறையத் தண்ணீர் போனாலும் அள்ளிக் குடிக்கப் போகிறதா நாய்? 2587

ஆற்றில் நிறையத் தண்ணீர் போனாலும் நாய் நக்கித்தான் குடிக்கும். 2588

ஆற்றில் பெருவெள்ளம் நாய்க்கு என்ன? சளப்புத் தண்ணீர். 2589

ஆறு எல்லாம் பாலாய் ஓடினாலும் நாய் நக்கித்தானே குடிக்கும்? 2676

— தமிழ்ப் பழமொழிகள்

**பாடவேறுபாடு:**

சுவடி எண் : 1708 'பொக்கிசம்'.

சுவடி எண் : 1827

'.................... தானுண் ணாமல்

.............. — ..............................

........ — ...... ............ — ....................

.............................. — . .......................

திக்கெல்லாம் மாரி பெய்து

தெருவெங்கும் பெருகி யோடி'

## 31

**உணர்வுகள் நிறையக் கொண்டு**
**உரத்துடன் பருத்து மீறி**
**பிணமெனத் தெருவில் நின்று**
**பேசுவார் சுத்த வீரர்**
**குணமுடன் களரிக் கேத்த**
**கூத்தாடிச் சிலம்ப மெல்லாம்**
**ரணகளந் தனக்கே றாது!**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள் :**

**உரம்** - வலிமை; திண்மை; அறிவு, **மீறி** — மிகுந்து, **களரி** — போர்க்களம்; வில், மல், நாடகம், கல்வி முதலியன

பயிலும் அரங்கு, **கூத்தாடி** — கழைக்கூத்தன், **சிலம்பம்** — கழி வீசுதல் முதலிய படைக்கலப் பயிற்சி.

**பாடவேறுபாடு:**

சுவடி எண் : 1827

'உணவுகள் நிறையக் கொண்டு
உரத்துடல் பருத்து மீறிப்
பிணமெனத் தெருவில் நின்று
பேய்க்கோலங் காட்டி மீள
குணமில்லாக் களரிக் கேத்த
கூத்தாடிச் சிலம்ப மெல்லாம்
ரணகளந் தனக்கா காது!'

## 32

**குருதனை யிகழ்ந்த சீஷன்**
**கொம்பனைப் பழித்த மாது**
**பரத்தையோ டிணக்கஞ் செய்வான்**
**பாரினில் காரு பாரு**
**கிருத்துவஞ் செய்ய மைச்சர்**
**கேள்வியில் லாத வேந்தர்**
**நரித்துரைத் தனத்தோ டொக்கும்**
**ராசகோ பால மாலை.**

**அருஞ்சொற்பொருள்:**

**குரு** — ஆசிரியர், வழிகாட்டி; **சீஷன்** — சீடன், **கொம்பன்** — கொடி படர்தற்கேதுவாகிய கொழுகொம்பு போன்ற கணவன், **மாது** — பெண், **பரத்தை** — பொருட்பெண்டிர், **பார்** — உலகம், **காருபாரு** — கார்பா(வா)ர் — அதிகாரம், **கிருத்துவம்** — கிருத்திரிமம் — வஞ்சனை, **கேள்வி** — நூற்பொருளைக் கற்றறிந்தவர் சொல்வதைக் கேட்டல்; விசாரணை, **துரைத்தனம்** — அரசாங்கம்.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

'தீதின் முடிமன்னவர் விசாரித் திடாதொன்று
செய்வ தவர்மேற் றோஷமாம்'

*— அறப்பளீசுர சதகம் — 66*

'கெற்பத்தால் மங்கையருக் கழகு குன்றும்
கேள்வியில்லா வரசனா லுலகம் பாழாம்
துற்புத்தி மந்திரியா லரசுக் கீனஞ்
சொற்கேளாப் பிள்ளைகளாற் குலத்துக்
கீனம்
நற்புத்தி கற்பித்தா லற்பர் கேளார்
நன்மைசெய்யுந் தீமையுடன் நயந்து
செய்வார்
அற்பரோ டிணங்கிவிடிற் பெருமை தாழு
மரியதவங் கோபத்தா லழிந்து போமே'

*— விவேக சிந்தாமணி — 16*

**பழமொழி:**

*துரோகத்தால் கொண்ட துரைத்தனம் குடிகளை வருத்தும் கொடுங்கோல்.* *— 12997 தமிழ்ப்பழமொழிகள்*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1827*

*'குருத்துரோகம் செய்யும் சீஷன் / கொழுநனைப் பழித்த
மாது
பரத்தைய ரிடத்தில் செல்வோன் / பலபொருள் வேசி
யாசை
கிருத்துவஞ் செய்யும் வநாசி / கேள்வியில் லாத வேந்தன்
நரப்பிணம் யிவர்கள் எல்லாம்!'*

## 33

கற்றவர், தங்கள் முன்னே
கல்வியில் லாத மோடர்

எத்தனை படித்திட் டாலும்
எதிர்த்துரை மொழிய மாட்டார்!
சத்தமிட் டதட்டி மீறுந்
தனிப்புலி யுடனே காலி
நத்திரஞ் செலுத்து மோசொல்?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**மோடர்** — (பேச்சுவழக்குத் திரிபு) — மூடர், **காலி** — பசு.

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1827*
*'சத்தமிட் டதட்டிப் பாயும் / தனிப்புலி யுடனெ நாயும் நற்றாமஞ் செலுத்து மோசொல்'*

## 34

மேர்வினில் சிறந்த காகம்
விரைந்துபொன் நிறமாம்! நல்லோர்
சார்வினில் சேர்வார் சேர்ந்தால்
தாழ்வொரு நாளு மில்லை!
பாரினில் மலரைக் கோக்கும்
பரிவுடன் கிழித்த வாழை
நார்மணம் பெற்ற தொக்கும்!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**மேர்வினில்** — மேருவில் — பொன்மலையினில், **பாரினில்** — உலகத்தில்.

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

"பெரிய குடிப்பிறந் தாரும் தமக்குச்
சிறியார் இனமாய் ஒழுகுதல் — எறியிலை
வேலொடு நேரொக்கும் கண்ணாய்!
அஃதன்றோ

பூவொடு நாரியைக்கு மாறு''

— பழமொழி நானூறு — 88

''.................... பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங்
காக்கையும் பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோவிவ்
விருநிலமே''

— யாப்பருங்கலக் காரிகை,
தற்சிறப்புப் பாயிரம் — 3

'தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ்
சாயல்பொன் மயமே தரும்

..................................................................

..................................................................

மானபெரி யோர்களொடு சகவாச மதுசெயி
லவர்கள்குணம் வருமென் பர்காண்'

— குமரேச சதகம — 43

பாடவேறுபாடு:

சுவடி எண்: 1708

'மேர்வினில் சேர்ந்த'

(இதுவே சரியான பாடம்)

35

தாயொடு தந்தை, மூத்தோர்,
தமிழறி வித்தோர், நல்லோர்
நேயமுத் திரியுள் ளோர்கள்,
நெறிபெருங் குருக்க ளானோர்,
ஆயும்வே தாந்த நூலோ
ரவர்களைப் பழிப்போ ரெல்லாம்
நாயினுங் கேட தாவார்!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**நேயம்** — அன்பு, பக்தி, **வேதாந்தம்** — உபநிடதம்; வேதமுடிவு

**பாடவேறுபாடு:**

சுவடி எண் 1708

'நாயிலுங் கடைய தாவார்

## 36

கடினம தாகப் பேசிக்
கைதனை நீட்டி வீசித்
துடியொடு நடந்து துள்ளும்
துர்ச்சனர் செய்கை யெல்லாம்
படிமிசை பறந்து மேய்ந்து
பகருங்கா கங்கள் வன்மை
நடமிடு பரிக்கொப் பாமோ?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**துர்ச்சனர்** — தீயவர், **வன்மை** — வலிமை, **பரி** — குதிரை

## 37

பங்கைய முகங்கள் காட்டிப்
பாதத்தில் சிலம்பு பூட்டிக்
கொங்கைகள் குலுங்கக் காட்டிக்
கோவையி னமுர்த மூட்டி*
யிங்கிதம் செய்வாள்! பின்னும்
யிடர்வரும் போது நில்லாள்
நங்கைய ருறவு மாமோ?
ராசகோ பால மாலை!

---

* முதலிரண்டடிகளும் இயைபுத் தொடை பெற்றவை.

அருஞ்சொற்பொருள்:

**பங்கையம்** — தாமரை, **சிலம்பு** — மகளிர் காலணி வகை, **கொங்கை** — மார்பகம், **கோவை** — கோவைப்பழம் போல் சிவந்த உதடுகள், **அமுர்தம்** — இதழ்நீர், **இடர்** — துன்பம், **நங்கையர்** — பெண்கள்

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

'தமதுதளர் வேளைக் கிலாதவோர் மனைவியேன்'

— *அறப்பளீசுர சதகம் — 80*

## 38

வாகன யோகம் வந்தால்
வணங்குவா ரிணக்கஞ் செய்வார்
சேகர மாக நிற்பார்
செல்வவா னிவனே யென்பார்
யோகமில் லாத போது
ஒருவருங் கெணியா ரையா!
நாகம்போல் சீறி வீழ்வார்!
ராசகோ பால மாலை!

அருஞ்சொற்பொருள்:

**வாகனம்** — ஊர்தி; விடாமுயற்சி, **யோகம்** — நற்பேறு; உயர்ச்சி. **சேகரம்** — கூட்டம், **கெணியார்** — கவனிக்க மாட்டார்கள்,

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

'கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை'

— *அதிவீரராம பாண்டியரின் வெற்றிவேற்கை — 48*

## 39

ஆச்சியாய்க் கற்ற கல்வி
ஆனதோர் சபையில் நின்று
கோச்சையாய்ச் சொல்வர் கண்டாய்!
கோழிக்குங் கட்டுங் கெச்சம்

**காச்சியாய்க் கெருடன் காலில்**
**கட்டிய கெச்சந் தானே!**
**ராச்சிய மெல்லாங் காட்டும்**
**ராசகோ பால மாலை!**

**அருஞ்சொற்பொருள்:**

**ஆச்சியாய்** — ஆசையாய், **சபை** — கற்றறிந்தோர் நிரம்பிய அவை, **கோச்சையாய்** — கொச்சையாய், (எதுகை நோக்கிய நீட்டல் விகாரம்) **கெருடன்** — கருடன், **ராச்சியம்** — நாடு •

## ஒப்புமைப் பழமொழிகள்:

கருடன் காலில் கெச்சை கட்டினது போல 7028
கோழியின் காலில் கச்சையைக் கட்டினாலும்
குப்பையைத் தான் சீய்க்கும் (கிளறும்) 10098

— *தமிழ்ப்பழமொழிகள்*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*
'கொச்சையாய்ச சொல்வர் கண்டார்'

## 40

**வாயினில் வந்த சொல்லை**
**மதலைச்சொல் லாமென் றெண்ணி**
**மாயனின் பேரைத் தொட்டு**
**மாலையென் றுரைத்தே னையா!**
**தாய்தனைப் பிள்ளை பார்த்துத்**
**தானேது சொன்னா லுந்தான்**
**நாயனே பொறுப்பார் செய்கை!**
**ராசகோ பால மாலை!**

**குறிப்பு:**

இப்பாடலுக்கு முன்னும் பின்னும் உள்ள பாடல்கள் நீதி கூறிச் செல்கையில் இடையில் இப்பாடல் மட்டும் '**அவை**

யடக்கப் பாடல்' என்று கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளது.

**அருஞ்சொற்பொருள்:**

**மதலைச்சொல்** — மழலைமொழி, **மாயன்** — திருமால், **நாயன்** — கடவுள்; தலைவன்

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

'பாலகன் புன்சொலைக் கேட்டுமே மகிழுமவள்
பார்மீதி லன்னை யலவோ?'

— *திருவேங்கட சதகம் — 102*

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*

'நாயனே பொறுப்பீர் செய்கை'

## 41

மாதருக் கழகு கற்பு!
மறைவதே முத்தி யாகும்!
சூதுசெய் தவரைப் பார்த்துச்
சோதித்தா லறிவ ரோதான்?
ஏதெனு முபாய மிட்டு
யிவள்மனந் தன்னைத் தானும்
நாதனு மறிவ துண்டோ?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**மாதர்** — பெண்டிர், **முத்தி** — முந்தி, **உபாயம்** — தந்திரம்
**நாதன்** — கணவன்

**பாடவேறுபாடு:**

*சுவடி எண்: 1708*

'மறைவதே முந்தி யாகும்' 'யிலள்மன்ற தன்னைப் பார்த்து'

## 42

எத்திசை யதனில் பேராம்
இலங்கிடு ரூப முண்டாம்!
உத்தம ரெண்டு பேரை
உலகினில் சொல்வ தாகும்!
கத்தறி யாத மோடர்
கைப்பொருள் மிகவுண் டாகில்
நத்தமிழ்க் கீடுண் டாமோ?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**இலங்கிடு** — விளங்கிடு, **ரூபம்** — உருவம்; **கத்தறி யாத மோடர்** (பேச்சு வழக்குத் திரிபு) — கற்றறி யாத மூடர், **நத்தமிழ்** - நற்றமிழ்.

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1706
'உத்தம ரென்று பேரை'

## 43

இன்மையில் கிளையும் வாழ்வு
மிருக்குதென் றினியோர் தம்மைக்
கன்மத்தால் வந்தா னென்று
கருத்தினில் நினைக்க வேண்டாம்!
தின்மைக்குச் செவித்த மேனந்
திரும்பஅவ் வாசல் தன்னில்
நன்மைக்குஞ் செவிக்கு மையா!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**இன்மை** — வறுமை, **கிளை** — சுற்றம்; உறவு, **கன்மத்தால்** — கருமத்தால்; பாவத்தால்; தீவினையால், **தின்மை** — தீமை

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1708

'கன்மத்தா லலைந்தா னென்று'

சுவடி எண்: 1827

'இன்மையாய்க் கிளையும் ............—
    மிருக்குதென் றெளியோர் தம்மைக்
கன்மத்தால் கெடுப்போ மென்று
    ............—............—............
............................................—
    திரும்பவும் அதுவே வந்து'

## 44

இடம்பதி தனையி கழ்ந்து
    இனஞ்சொல்லி யஞ்ச கத்தே
அடந்தவர்க் கிடுக்கஞ் செய்தால்
    அதுபழி வினைபோ காது!
துடந்தது வருமே நன்றாய்த்
    தூக்கியே அடிவைத் தாலும்
நடந்தகா லிடறு மையா!
    ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**பதி** — இடம், தலைவன், **அடந்தவர்க் கிடுக்கஞ் செய்தால்** (பேச்சு வழக்குத் திரிபு) — அடைந்தவர்க் கிடுக்கண் செய்தால், **இடுக்கண்** — துன்பம், **துடந்தது** — தொடர்ந்தது, **இடறும்** — கால் தடுக்கும்;

**பாடவேறுபாடு:**

சுவடி எண்: 1708

'இனஞ்சொல்லி யஞ்ச கத்தை'

சுவடி எண்: 1827

'இடம்பதி தனையி கழ்ந்தோர்
இரந்துணம் பேரார் வத்தால்வந்
தடைந்தவர்க் கிடுக்கஞ் செய்தா
லவதினம் பழிவீண் போகாது.
துடந்தபின் வருமே நன்றாய்
தூக்கியே அடிவைக் காமுன்'

## 45

சொல்லினுக் கடங்கு மாதர்
துலங்குவார் குணத்தி னாலே!
அல்லது அல்லா மாதர்
அவருல கினில்பே ராமோ?
பல்லது காட்டி நாயும்
பகைத்துச்சந் திரனைப் பார்த்து
நல்லது தெரியு மோசொல்?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள் :**

**துலங்குவார்** — சிறந்து விளங்குவார்

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

**'திங்களை நாய்குரைத் தற்று'**
— *பழமொழி நானூறு — 107*

**'..................துலங்கும் பூர்ண
சந்திரனைப் பார்த்துநின்று நாய்குரைத்த போதிலென்ன
தாழ்ச்சி தானே!'**
— *தண்டலையார் சதகம் — 32*

## 46

மயம்பெறப் பணிகள் பூண்டால்
மாமுகத் தழகே யாகும்!
செயம்பணிக் கேது முண்டோ?
சித்திரஞ் சுவரில் வைத்தால்
தயவுடன் பார்த்த பேர்க்குத்
தானது துலக்க மல்லால்
நயமது தெரியு மோசொல்?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**மயம்** — *அழகு*, **பணி** — *அணிகலன், பட்டாடை*, **செயம்** — *வெற்றி*, **சித்திரம்** — *ஓவியம்.*

## 47

தம்பியே யென்பாள் பின்னும்
சன்னைசெய் தழைப்பாள் வீணே
கெம்புவ ளழுவள் மிஞ்சக்
கெருவிதஞ் செய்வள் கோபி
வம்புகள் செய்வள் நல்ல
மணவாள னென்றுறுதி கொள்ளாள்
நம்புவர்க் கேது நன்மை?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**சன்னை** — *எள்ளுதற் சொல்*, **கெம்புவள்** — *கொந்தளிப்பாள், உரத்துப் பேசுவாள்*, **கெருவிதம்** — *கருவம்*, **மணவாளன்** — *கணவன்.*

## 48

புலனொடு நூல்க ளாய்ந்து
புகலுவார் புலவ ராவார்
பிலனொடு யிருந்த மோடர்
பேசினா லாவ தென்ன?
நிலமதில் சித்தி ரங்கள்
நிலைபெற யெழுதி வைத்தால்
நலமிடர் அறியு மோசொல்?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**புலன்** — *அறிவுடைமை,* **புகலுவார்** — *சொல்லுவார்,* **மோடர்** — *மூடர்,* **இடர்** — *துன்பம்.*

## 49

காரிரு குழல்கள் கோதிக்
கயல்விழி மருட்டிக் கொஞ்சி
வீரியம் பேசு மாதர்
வேசியுங் கணவன் றன்னைச்
சீரிமை யாகச் செய்யாள்!
தினந்தினம் பூசை செய்யாள்!
நாரியர்க் கேது பத்தம்?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**கார்** — *கரிய; கருமேகமொத்த,* **கயல்**—*மீன்,* **மருட்டி** — *மயக்கி,* **நாரியர்** — *பெண்டிர்,* **பத்தம்** — *கட்டு; உண்மை, செய்ந்நன்றியறிகை.*

## 50

பூணதோர் பணிகள் தோணப்
பொற்கருட மொருபால் காட்டி
வேணதோர் குல்லத் தோரும்
வெளியினில் வந்த மாதர்
சாணியின் கூடை யொக்கும்!
சவாதினுக் கிணையோ பின்னும்?
நாணந்தான் அவளுக் கேது?
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**பணி** — *அணிகலன்; பட்டாடை*

**ஒப்புமைப் பாடல்கள், பகுதிகள்:**

'இதசாணி ஒருகூடை மிக்கசவ்வா
தோர்பணத்தி
னிடையென் பாரே'

— *செயங்கொண்டார் சதகம் — 90*

'வேசைக்கு நாணில்லை'

— *அறப்பளீசுர சதகம் — 10*

'சாணியும் சவ்வாதும் சரி ஆகுமோ?'

— *தமிழ்ப்பழமொழிகள் 10555*

## 51

புகையது நிறமென் றெண்ணிப்
பொருமியே விரும்பிப் பாரில்
இகல்செய்வார் தமக்கு மோச்சம்
எப்படி யாகு மையா?
செகமதில் புண்ணி யங்கள்
செய்தவர் தங்கட் கெல்லாம்

நகைபுரிந் துதவு நல்லோர்
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**பொருமி** — பூரித்துப்: பொறாமை கொண்டு, **பாரில்** — உலகத்தில், **இகல்** — பகை, போர், **மோச்சம்** — மோட்சம் — வீடுபேறு, **செகம்** — உலகம்'

## 52

சமனிரை ராசி யாகச்
சார்ந்தக முடலு மொன்றாய்க்
கமையுட னிருக்கும் பாரி
கணவனுக் குயிரெண் ணாமல்
நிமைவிழிச் சுருட்டு முன்னே
நினைத்தவர்க் கீர்நி செய்யும்
நமனவன் வரக ளாகும்!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

**அகம்** — மனம், **கமை** — பொறுமை, **பாரி** — மனைவி, **நிமை** — இமை, **நமன்** — எமன்.

## 53

அச்சுதன் முடியின் மீது
ஆனபூ மாலை சாத்தி
தச்சதோர் நாகர்க் கொப்பாந்
தமிழென உரைத்த புன்சொல்
கொச்சையாய் யிருந்தா லுந்தான்
கூடிய புலவர் பார்த்து
ரச்சகன் பொருளால் தள்ளான்!
ராசகோ பால மாலை!

**அருஞ்சொற்பொருள்:**

*அச்சுதன் — அழிவில்லாதவன்; கடவுள்; திருமால், தச்சதோர் (பேச்சு வழக்குத் திரிபு) — தைத்ததோர், புன் சொல் — சிறுசொல் (அவையடக்கமாகத் தாழ்த்திக் கூறியது.) ரச்சகன் — இரட்சகன் — காப்பாற்றுபவன்.*

## நூற்பயன்

**ராசகோ பால மாலை**
**நாற்பது பத்து மூன்றும்**
**ஓசையாய்க் கேட்ட பேர்க்கும்**
**உகந்துட னெழுது வோர்க்கும்**
**நேசமாய்ப் படித்த பேர்க்கும்**
**நிச்சய மிவர்க ளெல்லாம்**
**வாசவன் பதவி பெற்று**
**வாழ்வுட னிருப்பர் தாமே!**

**அருஞ்சொற்பொருள்:**

**உகந்து** — விரும்பி, **நேசமாய்** — அன்புடன்; பக்தியுடன் **வாசவன்** — இந்திரன்.

# நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகள், உவமைகள்

*[எண்: செய்யுள் எண்]*

தாமரைத் தேனின் அருமையை அருகிலிருந்தாலும் தவளை அறியாது. தொலைவிலிருந்தாலும் வண்டுகள் அறியும். 1

பேய்க்குமட்டிக் காய்க்கு மணப்பொருட்களை (ஐங்காயம்) இட்டு, அதனைச் சமைத்தாலும் அதனுடைய கசப்புத் தன்மை மாறாது. 2

பூத்துக் குலுங்கும் மலரின் மணத்தை, வண்டு அறியுமே அல்லாமல் தவளை அறியாது. 3

மூன்று வேளையும் பாம்புக்குப் பாலூட்டி வளர்த்தாலும் பாம்பினுடைய நஞ்சு ஒழியாது. 4

வேப்பஞ்சாற்றில் இனிய தேனைக் கலந்தாலும் வேப்பஞ் சாற்றின் கசப்பு மாறாது. 5

கடலாழம் காணலாம், மலைச்சிகரத்தின் உயரம் அளக்கலாம். மனைவியின் மனத்தின் ஆழம் மட்டும் அறிய முடியாது. 6

அரவத்தை நம்பினாலும் மதயானையை நம்பினாலும் நம்பலாம். பொருள் பறிப்பதற்காக மயக்குமொழிகளைப் பேசும் பெண்களின் (பொருட் பெண்டிரின்) சொல்லை மட்டும் நம்பக்கூடாது. 7

விதி இராட்டனச் சுற்றினைப் போல்.
(உயர்வையும் தாழ்வையும் மாற்றி
மாற்றி அளிக்கும்) 8

நீர்நிலைகளில் துள்ளி மகிழும் மீன்கள்
கரைக்கு வந்து விழுந்துவிட்டால் காய்ந்து
விடும். 9

எருக்கஞ்செடி அதிகமாகப் பூத்துக் கிடந்தாலும்
மருக்கொழுந்தின் மணத்தைப் பெறமுடியாது. 10

ஒளிவீசும் நிலாவை நோக்கிச் சினத்துடன்
நாய் குரைத்தது போல. 11

மேட்டில் விதைத்த செந்நெல் போல 12
உடல் நல - வளம் இல்லாத, விழைவற்ற
பெண்ணுடன் உறவுகொள்வதினும்
தென்புடைய பெண்ணின் முகத்தைக் கண்டு
மகிழ்வதே சிறந்தது. 13

பட்டு கிழிந்தாலும் பாணருக்கு ஆகும்.
குப்பையிலே கிடந்தாலும் இரத்தினத்தின்
ஒளிபோகாது. 15

நண்டு போன்ற வாழ்க்கை 16

நாதம் இல்லாத சங்கு 17

கோடி மீன்கள் வானில் உதித்தாலும்
சந்திரனுக்கு அவற்றால் ஒப்பாக முடியாது 18

நாடிய விதி விடாது. 19

மணி சுமந்த நாகத்தின் கூர்மைபோல் 20

புலிக்கு அஞ்சி மரத்தில் ஏறிய வேடனைக் காப்பாற்றிய குரங்கையே அந்த வேடன் கொன்ற கதை போல. 21

கணை விசையோடு இலக்கை எய்தல் போல். செவிடன் காதில் சங்கூதியது போல். 22

தருமமே வெல்லும் 23

பாறை நிலத்தில் சம்பா விதையைத் தெளித்தாலும் பயிர் விளையாது. 26

தேனில் தோய்த்த முக்கனி, நரகில் விழுந்துவிட்டால் நக்கவோ? எடுக்கவோ? 27

இலங்கையிலே மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்த இராவணன் வாழ்க்கையும் என்ன ஆயிற்று? 28

வானத்தையும் பூமியையும் தாங்கும் வலிமை இருந்தால்தான் என்ன? 29

திசையெல்லாம் மழைபெய்து தெருவெல்லாம் நீர் பெருகி ஓடினாலும் நாய் நக்கிநக்கித்தான் தண்ணீர் குடிக்கும். 30

கூத்தாடிச் சிலம்பமெல்லாம் போர்க்களத்திற்குப் பயன்படாது. 31

நரி அரசாட்சி செய்வது போல 32

உறுமி விரட்டும் புலியைப் பசு எதிர்த்துப் பாயாதது போல் 33

மேரு மலையைச் சேர்ந்த காக்கையும் பொன்நிறம் பெறும்.

மலரின் மணத்தால், கோக்கப் பயன்படும்
வாழைநாரும் மணம் பெறும். 34

நாயினும் கேடாக ஆவர். 35

பறந்து மேயும் காகங்கள் நடமிடும்.
பரிகளுக்குச் சமமாக மாட்டா. 36

நாகம்போல் சீறி விழுதல் 38

கோழிக்குக் கட்டுங் கெச்சம் கருடன் காலில்
கட்டிய கெச்சம் தானே. 39

தாயினைப் பிள்ளை பார்த்துத் தானேது
சொன்னாலும் தாய் பொறுப்பது போல. 40

தமிழுக்கு ஈடுண்டோ? 42

தீமைக்குச் செவித்த மேளம் திரும்ப
நன்மைக்கும் செவிக்கும். 43

தூக்கியே அடிவைத்தாலும் நடந்தகால்
இடறும். 44

சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தல் 45
சித்திரத்தைச் சுவரில் வைத்தால், தயவுடன்
பார்த்த பேர்க்குத்தான் அதன் நயம் தெரியும்.
46

நிலமதில் சித்திரங்கள் எழுதி வைத்தால்
நலம், இடர் அறியுமோ அவை? 48

சாணிக்கூடைக்குச் சமமான பின்பு சவ்வாதினுக்கு
இணையாக முடியுமோ? 50

புகையை நிறம் என்று எண்ணிச் சண்டையிடல்
51

# பின்னிணைப்பு

## தமிழில் பெண் வெறுப்பு—பழிப்புப் பாடல்கள்

'பெட்பு' என்னும் சொல்லடியாகப் பிறந்த 'பெண்' என்னும் சொல் விரும்பத்தக்கவள், பேணத் தக்கவள் என்னும் பொருளுடையதாகும். விரும்பத்தக்கவள் வெறுக்கத் தக்க வளாய் — பழிக்கத்தக்கவளாய்க் கருதப்பட்ட நிலைமைக்குக் காரணம், அவ்வகைக் கருத்தின் வன்மை, மென்மைகள் சிந்திக்கத் தக்கவையாகும்.

மனிதசமுதாயம், இனக்குழுச் சமுதாயத்திலிருந்து வளர்ச்சி யடையத் தொடங்கிய காலகட்டத்திலும், இனக்குழுச் சமுதாயத்திலும், அதற்கு முன்னும் பெண்ணே தலைமைத் தன்மை கொண்டவளாக விளங்கினாள். தொன்மைச் சமூகம் தாய்வழிச்சமூகமாக இருந்தது என்பர் வரலாற்றாசிரியர். (இராகுல சாங்கிருத்தியாயனின் ''வால்காவிலிருந்து கங்கை வரை'' இச்செய்திகளைக் கதை வடிவில் எடுத்துரைக்கும் நூலாகும்.)

சொத்துடைமை காரணமாக நிலவுடைமைச் சமுதாயத்தில் பெண்ணின் உயர்நிலையும், உரிமைகளும் மெல்லமெல்லப் பறிக்கப்பட்டன. தொன்மைச் சமுதாயத்தில் இன்றுள்ள கற்பு வரையறைகள் இல்லை. நிலவுடைமைச் சமுதாயத்தில் கற்பு வரையறைகள் கால்கொள்ளுகின்றன. அதே நேரத்தில் செல்வம் மிகுந்த ஆடவர்களால் நிலவுடைமைச் சமுதாயத்திலும் வணிக வர்க்கச் சமுதாயத்திலும் பரத்தைமையும் கால் கொண்டு வலுப்பெறுகின்றது.

திருக்குறள் காலத்தில் பெண் உயர்ந்தவளாகக் கருதப்பெற ஒரு கட்டுப்பாடு விதிக்கப் பெறுகின்றது. அக்கட்டுப்பாடே கற்புடைமை.

('பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்' — குறள் - 55)

சங்க இலக்கியத்தில், தொல்காப்பியத்தில் பரத்தையர் காணப்படுகின்றனர். அவர்கள் வெறுத்தொதுக்கப்படவில்லை. தள்ளப்படவில்லை. சற்றே எள்ளப்படுகின்றனர். பரத்தைமைக்கு மிகப்பெரிய எதிர்ப்பை நாம் அக்காலத்தில் காண முடியாது.

நீதி இலக்கிய — வணிக வர்க்க சமுதாய காலகட்டத்தில் தான் (திருக்குறள், நாலடியார் முதலியனவற்றில்) வெளிப்படையாகவும் கடுமையாகவும் பரத்தைமை எதிர்ப்பை நாம் காண்கிறோம். தொடர்ந்து தமிழிலக்கிய வரலாற்றில் இன்று வரை பரத்தைமையைக் கண்டிக்கும் குரல்களைக் கேட்கின்றோம். பரத்தைமை எதிர்ப்பென்பதன் தொடர்ச்சியாக — வளர்ச்சியாக மூவாசைகளில் ஒன்றான பெண்ணாசையைத் துறக்க வேண்டும், சிற்றின்ப நாட்டத்தை விலக்கிப் பேரின்ப நாட்டங் கொள்ளவேண்டும் என்னுங் குரல்கள் எழுகின்றன. இக்குரல்களே ஒரு கட்டத்தில் பரத்தைமை வெறுப்பு என்றில்லாமல்' ஒட்டுமொத்தமான பெண்வெறுப்பு' என்ற நிலையையும் அடைகின்றன; ஒலிக்கின்றன.

'இராசகோபால மாலை' யிலும் இக்குரல்களைக் கேட்கின்றோம். இக்கருத்துகள் பற்றித் தெளிவுபடுத்த வேண்டிய சூழல் தமிழிலக்கிய உலகில் உள்ளது. சிலநேரத்தில் பரத்தைமை வெறுப்பை, பழிப்பை ஒட்டுமொத்தப் பெண்பழிப்பாகவே பிறழ உணர்ந்து விடுகின்ற சூழலும் தமிழில் உள்ளது. அதன் பொருட்டு 'இராசகோபால மாலை' யில், பரத்தைமை வெறுப்புக் (பெண் வெறுப்பு?) கருத்தை வெளியிடும் பாடல்களைக் காணலாம்.

'அம்புபோல் நீண்ட வாலாம்
அரவத்தை நம்பி னாலும்
கொம்பினால் குலைகள் செய்யும்
குஞ்சரந் தனைக்கண் டாலும்

வம்புசேர் மொழியி னார்கள்
    மடந்தையர் சொல்லைத் தானே
நம்பினால் மோச மய்யா!
    ராசகோ பால மாலை!' (7)

'கற்புள்ள மாதர்க் கன்பு
    கணவனே அழகு! மிக்க
விற்புரு சிலையில் மின்னார்
    வேசியர்க் கழகு மஞ்சள்' (24)

'பங்கைய முகங்கள் காட்டிப்
    பாதத்தில் சிலம்பு பூட்டிக்
கொங்கைகள் குலுங்கக் காட்டிக்
    கோவையி னமுர்த மூட்டி
இங்கிதம் செய்வாள் பின்னும்
    இடர்வரும் போது நில்லாள்
நங்கையர் உறவும் ஆமோ?
    ராசகோ பால மாலை!' (3 )

'காரிரு குழல்கள் கோதிக்
    கயல்விழி மருட்டிக் கொஞ்சி
வீரியம் பேசு மாதர்
    வேசியுங் கணவன் றன்னைச்
சீரிமை யாகச் செய்யாள்!
    தினந்தினம் பூசை செய்வாள்!
நாரியர்க் கேது பத்தம்!
    ராசகோ பால மாலை!' (49)

'பூணதோர் பணிகள் தோணப்
    பொற்கருட மொருபால் காட்டி
வேணதோர் குலத் தோரும்
    வெளியினில் வந்த மாதர்
சாணியின் கூடை யொக்கும்!
    சவாதினுக் கிணையோ பின்னும்?
நாணந்தான் அவளுக் கேது? (50)

பெண்வெறுப்புப் பாடல்களைப் பெருக எழுதியவர் என்று கருதப்படுகின்றவராகப் பட்டினத்தார் காட்சியளிக்கின்றார். பத்ரகிரியார்.இடைக்காட்டு சித்தர்,கடுவெளிச்சி த்தர் பாம்பாட்டி சித்தர், சட்டைமுனி சித்தர் முதலியோர் பாடல்களிலும் திருவேங்கட சதகத்திலும் பெண்வெறுப்புப் பாடல்கள் காணப்படுகின்றன. விவேக சிந்தாமணியில் பெண்வெறுப்புப் பாடல்கள், பெண்சொற்கேட்டலைக் கண்டிக்கும் பாடல்கள், பரத்தைமையைக் கடியும் பாடல்கள் முதலியன காணப்படுகின்றன. ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம் முதலியவற்றில் பரத்தையரை வெறுத்தல், பெண்சொற்கேட்டலை எதிர்த்தல் ஆகிய பாடுபொருள்களில் பாடல்கள் உள்ளன.

இப்பெண்வெறுப்புப் பாடல்கள் எழுந்தமைக்குச் சிலவற்றைக் காரணங்களாகக் கருதலாம்.

1. ஆன்மா முத்தியடைதலைத் தடுக்கும் சக்திகளில் ஒன்று பெண் என்ற எண்ணம். பேரின்ப நாட்டத்திற்குத் தடை பெண். சிற்றின்ப நாட்டமே பெண் விழைவு. அதனால் பெண்ணை வெறுத்து, பழித்துப் பாடுதல் என்பது ஒரு காரணம்

2. பொருள் பறிக்கக் கருதி மயக்குமொழிகள் பேசும் பெண்கள்(பரத்தையர்)நம்புதற்குரியவரல்லர், ஏமாற்றி விடுவர். அவர்களின் சொல்லை நம்பக்கூடாது. இந்த அடிப்படையில் பரத்தையரை வெறுத்தல், பரத்தையர் சொற்கேட்டலை எதிர்த்தல், இப்பாடுபொருள் உடைய பாடல்கள் சில கட்டங்களில் பெண்வெறுப்புப் பாடல்கள், பெண்சொற் கேட்டலை எதிர்க்கும் பாடல்கள் என்றே பிறழ உணரப்பட்டுள்ளன, பிறழ உணரும் வகையில் சில, தெளிவின்றி எழுதப்பட்டும் இருந்தன. அவ்வாறு பிறழ உணர்ந்தவர்களில் சில படைப்பாளிகளும் இருந்திருக்கக்கூடும்.அப்படைப்பாளிகள் தாங்கள் பிறழ உணர்ந்ததை அப்படியே தம்படைப்பில் எழுதிச் சென்றிருக்கக் கூடும். (முந்தைய இலக்கியப் பாடுபொருள் மரபைப் பேணும் எண்ணத்தில்) ஔவையாரின் 'தையல்சொல் கேளேல்' என்னும்

மொழி பலராலும் 'ஔவையார் பெண்சொற் கேட்டு நடப்பதைக் கண்டிக்கின்றார்' என்றே தவறாக உணரப்பட்டுள்ளது. உண்மையில் அத்தொடர் 'பரத்தையர் சொற்கேட்டு ஆடவர் நடத்தலைக் கண்டிப்பதாகவே' அமைந்துள்ளது. (தையல்-பரத்தை) (தையல்—புனைவு, பகட்டிக் கொள்ளுபவள்)

3. சிலரின் தனிவாழ்வில் மனைவி செய்த துரோகம், துரோகத்தால் எழுந்த கோபம் ஒட்டுமொத்தப் பெண்ணினத்தின் மேல் பாய்ந்து, பெண்களை நம்பக்கூடாது என்று தொடங்கிப் பெண்வெறுப்பை உமிழும் பாடல்களாக உருவெடுத்திருக்கக் கூடும்.

இக்காரணங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் பேரின்பத்தை அடையப் பெண் தடை, பரத்தையர் மயக்குக்கும் முயக்குக்கும் ஆட்பட்டு அலைக்கழியக் கூடாது என்னும் கருத்தின் அடிப்படையிலும் சில கட்டங்களில் ஒட்டுமொத்தமாகப் பெண்ணை வெறுத்தல் என்னும் அடிப்படையிலும் பட்டினத்தார், பாம்பாட்டி சித்தர், திருவேங்கட சதகத்தார் முதலியோர் பெண்வெறுப்புப் பாடல்களைப் பாடியுள்ளனர். ஔவையார் பாடல்கள், தண்டலையார் சதகப் பாடல்கள், விவேக சிந்தாமணிப் பாடல்கள் முதலியன பரத்தையரின் மயக்குமொழிகளைக் கேட்கக்கூடாது என்னும் கருத்தடிப்படையில் பெண்சொல்லைக் கேட்டு நடக்கக்கூடாது என்று பொதுவாக எல்லாப் பெண்களையும் உட்படுத்திக் கூறுகின்ற கருத்தடிப்படையிலும் உருவெடுத்துள்ளன.

பட்டினத்தார் முதலியோர் பேரின்பம் அடைதல் என்கின்ற கொள்கைக் கொடியினை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்திப் பிடிக்கலாம். ஆனால் அழகியல் நோக்கிலும், வண்ணனை மரபுநிலை நோக்கிலும் கவிஞர்களால் மென்மையாகவும் உயர்வாகவும் வருணனை செய்யப் பெற்ற பெண் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டு பெண் உடல் உறுப்புகளின் செயல்பாட்டைக் கூறி அருவருக்கத்தக்க, வெறுக்கத்தக்க முறையில் விளக்கிப பாடியுள்ளமை ஏற்கத்தக்கவை அல்ல. அவ்வாறு பாடியுள்ளமை மானுடப்

படைப்பை-படைப்பின் தன்மையை முழுமையாக உணராமையால்தான் எனலாம். பேரின்பத்தை அடையும் பேற்றை அடையப் பின்னால் பாடுபடும் உயிர், பிறப்பெடுக்கவே பெண்தான் மூலம் என்னும் உண்மை, இவர்களின் மனத்தில் பதியவில்லை போலும். (பெண்ணுடலுறுப்புகளின் செயல்பாட்டை அருவருக்கத்தக்க முறையில் விளக்கிய இந்த ஆண் கவிஞர்களின் — எல்லா ஆண்களின் உடல் உறுப்புகளும் அதே செயல்பாட்டைக் கொண்டவைதாம். ஆனால் ஆணுடலுறுப்புகளை அழகியல் முறையில் கவிஞர்கள் அதிகம்வருணிக்கவில்லை. வன்மை அடிப்படையில் வருணித்துள்ளனர்). (வருணிக்கப் பெற்ற, பின்னால் இழிக்கப் பெற்ற பெண் உடல் உறுப்புகள்: நெற்றி, கூந்தல், விழி, நாசி, உதடு, வாய், செவி, முகம் கழுத்து, மார்பகம், இடை, கை, தொடை, அல்குல், பாதம் முதலியன).

பட்டினத்தார் பாடல்களில் பேரின்பத்தை அடைய விடாமல் தடுக்கும் காமம், காமுகராக்கும் பரத்தையர் பகட்டு ஆகியவற்றைக் கண்டிக்கும் பாடல்கள் உள்ளமை மட்டுமன்றி ஒட்டுமொத்தமாகப் பெண்களையே இழித்துப் பாடும் பாடல்களும் உள்ளன. பட்டினத்தாரின் 'கைப்பிடி நாயகன் தூங்கையிலே' என்னும் பாடலின் தொனி இவற்றிலிருந்து வேறுபட்டது இது கூர்ந்து நோக்கத்தக்கது. (பெண்களைப் போற்றும் பாடல்களும் பட்டினத்தாரில் இருப்பதை எடுத்துக் காட்டுவார் திரு.வி.க. தமிழில் இரண்டு பட்டினத்தார் தலை காட்டுவதால் சில குழப்பங்கள் நேர்கின்றன. இவற்றை ஆழமாக ஆய்ந்து தெளிவுபடுத்த வேண்டும்)

பரத்தைமை வெறுப்பு, பரத்தையர் சொற் கேட்டலுக்கு எதிர்ப்பு ஆகிய பாடுபொருளில் பின்னால் பல பாடல்கள் தோன்றின. சில நேரங்களில் சில பாடல்கள், பெண்வெறுப்பு, பெண்சொற் கேட்டலுக்கு எதிர்ப்பு ஆகியவற்றையும் இவற்றுடன் இணைத்து மயங்க எழுதப் பெற்றிருக்கின்றன. இந்நிலை பலரையும் இப்பாடல்கள் பெண்ணையே தாழ்த்துகின்றன; பெண்சொற் கேட்டலையே எதிர்க்கின்றன என்று எண்ணச் செய்துவிட்டன.

பெண்ணை இழிக்கின்ற பாடல்கள் என்னும் நிலை ஏற்பட்டு, மானுடத்தின் பாதியான பெண்ணைக் கேவலப் படுத்துகின்ற பாடல்களாகச் சில விளங்கியமையாலும், சில அவ்வாறு பிறழ உணரப் பெற்றமையாலும் தான் பாரதி-யாரால் 'தையலை உயர்வுசெய்' என்றும் 'பெண்மை வாழ்க வென்று கூத்திடு வோமடா' என்றும் 'மானஞ் சேர்ப்பன மனைவியின் வார்த்தைகள்' என்றும், பாரதிதாசனால் 'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாமென் கின்றீரோ?' என்றும் பாடப்பெறுகின்ற நிலைமை - தேவை தோன்றியது. பாரதியாலும், பாரதிதாசனாலும் மற்றும் இக்காலக் கவிஞர் களாலும் ஆணுக்குச் சமமாகப் பெண்களைப் போற்றியும் பெண்மையின் சிறப்பை எடுத்துரைத்தும் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன; பெறுகின்றன.

பரத்தையரை வெறுத்தல் என்பதிலும் பரத்தையரின் நிலையை எண்ணிப் பரிவுகாட்டுதல், பரத்தையர் விரும்பி அத்தொழிலைச் செய்தல் என்பதைவிடச் சமுதாயம் அவர்களை அந்நிலைக்குத் தள்ளிய - தள்ளுகின்ற உண்மையை எடுத்துக் காட்டுதல் ஆகிய அடிப்படையில் இன்று நா. காமராசன் ('விலைமகளிர்' — கறுப்புமலர்கள்) முதலிய கவிஞர்களால் பரத்தையரைப் பரிவுக்கண்கொண்டு நோக்கி அவர்களை அத்துயர நிலையிலிருந்து மீட்கத் தூண்டும் பாடல்கள் எழுதப் பெற்றுள்ளன; எழுதப் பெறுகின்றன.

ஆணாதிக்க சமுதாயத்தின் ஆளுமையின் ஒருவடிவமே இடைக்காலத்தில் எழுந்த பெண்வெறுப்புப் பாடல்கள்! 'முத்தி, பேரின்பம் கூட. ஆண்கள் மட்டுமே அடைய வேண்டும் அடையத் தக்கது. அதற்குப் பெண் தடை' என்ற கருத்து ஆணாதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடே.

பெண், முத்தி — பேரின்பம் அடையவேண்டும், அதற்கு ஆண்தடை என்ற கருத்தை முன்வைத்து ஆண்களை வெறுத்து, ஆண் உடல் உறுப்புகளின் செயல்பாட்டை அருவருக்கத்தக்க முறையில் எடுத்துரைக்கும் பெண்பாற் புலவர்தம் படைப்புகள் தமிழில் தோன்றவில்லை. தோன்றியிருப்பின் பட்டினத்தார்

போன்றோரின் பாடல்களுக்கு, எண்ணத்திற்குச் சரியான பதிலடி கிடைத்திருக்கும்.

இத்தமிழ்இலக்கிய வரலாற்றுச் சூழலில் 'இராசகோபால மாலையில்'யில் இடம் பெற்றுள்ள சில பாடல்கள் பெண் வெறுப்பு, பெண்சொற் கேட்டலுக்கு எதிர்ப்பு என்ற அடிப் படையில் எழாமல், பரத்தைமை வெறுப்பு, பரத்தையர் சொற் கேட்டலுக்கு எதிர்ப்பு என்ற அடிப்படையில்தான் எழுந் துள்ளன.

பெண்வெறுப்பு, பழிப்புப் பாடல்கள் தோன்றிய, கால கட்டமும் மனோபாவமும் மறைந்து 'பெண்மை வாழ்கவென்று கூத்திடும்' 'தையலை (பெண்) உயர்வு செய்யும்' மனோபாவத் துடனான கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம் என்பதே மானுடப் பிறப்புக்கும், நமக்கும் — தமிழ் இலக்கிய வரலாற்றுக்கும் பெருமைதரும் நிலையாகும்,

**குறிப்பு :**

'தமிழில் பெண் வெறுப்பு — இழிப்புப்பாடல்கள்' என்னும் இக்கட்டுரை, இந்நுதல் பொருட் கண்ணோட்டத்தில் மேலோட்டமாக, தொடக்கமாகச் செய்யப்பெற்ற முயற்சி. இதனை இன்னும் ஆழமாக எடுத்து ஆராய, ஆய்வாளர்கள் முனைவார்களாக.

**பட்டினத்தார்**
**கச்சித் திரு அகவல் — 4**

திருமால் பயந்த திசைமுகன் அமைத்து
வரும்ஏழ் பிறவியும் மானுடத் துதித்து
மலைமகன் கோமான் மலர்அடி இறைஞ்சிக்
குலவிய சிவபதம் குறுகாது அவமே.
மாதரை மகிழ்ந்து காதல்கொண் டாடும்
மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்;
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்,
முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்

உள்ளங் காலைப் பஞ்செனு உரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வரால்எனச் சொல்லித் துதித்துத்
தசையும் எலும்பும் தக்க கண் குறங்கை
இசையுங் கதலித் தண்டென இயம்பியும்
நெடும்உடல் தாங்கி நின்றிடும் இடையைத்
துடியிடி என்று சொல்லித் துதித்தும்
மலமும் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை ஆலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீறிப்பாய்ந் தேறி
உயிரால் கீறல் உலர்ந்துஉள் உருகி
நகுவார்க்(கு) இடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட்டு என்றும்
குலையும் காமக் குருடர்க்(கு) உரைப்பேன்.
நீட்டவும் முடக்கவும் நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவும் உதவிஇங் கியற்றும்
அங்கையைப் பார்த்துக் காந்தள்என் றுரைத்தும்
வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப்
பாரினில் இனிய அமுதெனப் பகர்ந்தும்
வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய்மலர் என்றும்
அன்னமும் கறியும் அசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீரும் சளியும் நின்றுநின் று ஒழுகும்
கூரிய மூக்கைக் குமிழ்எனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிராது ஒழுகும்

கண்ணைப் பார்த்துக் கழுநீர் என்றும்
உள்ளுங் குறும்பி ஒழுகும் காதை
வள்ளைத் தண்டின் வளம்என வாழ்த்தியும்
மையும் எண்ணெயும் கலவாது ஒழியில்
வெய்ய அதரும் பேனும் விளையத்
தக்கதலை யோட்டில் முளைத்(து) எழுந்த
சிக்கின் மயிரைத் திரள்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்
தோலும் இறைச்சியும் துதைந்துசீப் பாயும்
காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடைவழி, தொளைபெறு வாயில்,
எண்சாண் உடம்பும் இழியும் பெருவழி,
மண்பால் காமம் கழிக்கும் மறைவிடம்,
நச்சிக் காமுக நாய்தான் என்றும்
இச்சித் திருக்கும் இடைகழி வாயில்;
திங்கள் சடையோன் திருவருள் இல்லார்
தங்கித் திரியும் சவலைப் பெருவழி.
புண்இது என்று புடவையை மூடி,
உள்நீர் பாயும் ஓசை செழும்புண்
மால்கொண்டு அறியா மாந்தர் புகும்வழி;
நோய்கொண்(டு) ஒழியா நுண்ணியர் போம்வழி;
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி,
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி,
பெண்ணும் ஆணும் பிறக்கும் பெருவழி
மலம்சொரிந்து, இழியும் வாயிற்கு அருகே

சலம்சொறிந்(து) இழியும் தண்ணீர் வாயில்
இத்தை நீங்கள் இனிதென வேண்டா
பச்சிலை இடினும் பத்தர்க்(கு) இரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை
அண்ட ரண்டமும் அனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை இணையடி இறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுதல் ஒழிந்தே!

## பட்டினத்தார் திரு ஏகம்ப மாலை

கைப்பிடி நாயகன் தூங்கையி லே அவன் கையெடுத்து
அப்புறம் தன்னில் அசையாமல் முன்வைத்து அயல்வளவில்
ஒப்புடன் சென்று துயில்நீத்துப் பின்புவந்(து) உறங்குவளை
எப்படிநான் நம்புவேன்? இறைவா? கச்சி ஏகம்பனே! 3

அன்ன சாரம் அதுவே விசாரம் அதுஒழிந்தால்
சொன்ன விசாரம தொலையா விசாரம் நல் தோகையரைப்
பன்ன விசாரம் பலகால் விசாரம்இப் பாவிநெஞ்சுக்கு
என்ன விசாரம் வைத்தாய் இறைவா கச்சி ஏகம்பனே! (8)

மாயநட் போரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோடி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்

தாயுடன் சென்று பின் தாதையைக் கடிப்பின்
தாயைமறந்
தேயும் அதேநிட்டை, என்றான் கச்சி
ஏகம்பனே ! (10)

வரிக்கோல வேல்விழியார் அனுராக மயக்கில்
சென்று
சரிக்கோதுவேன் எழுத்துஅஞ்சுஞ் சொலேன்தனி
யேனுடலம்
நரிக்கோ ? கழுகுபருந்தி னுக்கோ, வெய்ய
நாய்தனக்கோ,
எரிக்கோ ? இரையெதற்கோ ? இறைவா
கச்சி ஏகம்பனே ! (11)

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டிஎன்
கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை
மறலிவிட்ட
தூதென் றெண்ணாமல் சுகமென்று நாடும்இத்
துற்புத்தியை
ஏதென் றெடுத்துரைப்பேன் ? இறைவா, கச்சி
ஏகம்பனே ! (12)

சீறும் வினையது பெண்உரு வாகித்
திரண்டுருண்டு
கூறும் முலையும் இறைச்சியும் ஆகிக்
கொடுமையினால்
பீறும் மலமும் உதிரமும் சாயும் பெருங்குழிவிட்டு
ஏறுங் கரைகண்டி லேன், இறைவா, கச்சி
ஏகம்பனே (14)

பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசும்
பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக்
கடிதடத்துப்

புண்ணாம் குழியிடைத் தள்ளி, என்போதப்
பொருள்பறிக்க
எண்ணாது உனைமறந்தேன் இறைவா! கச்சி
ஏகம்பனே! (23)

முட்டற்ற மஞ்சளை எண்ணெயிற் கூட்டி
முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை ஏலை
விளக்கிட்டுப்
பட்டப் பகலில் வெளிமயக்கே செய்யும்
பாவையர் மேல்
இட்டத்தை நீதவிர்ப்பாய், இறைவா! கச்சி
ஏகம்பனே! (29)

பிறந்துமண் மீதில் பிணியே குடிகொண்டு
பேரின்பத்தை
மறந்துசிற் றின்பத்தின் மேல்மயலாகிப்
புன்மாதருக்குள்
பறந்துழன்றே தடுமாறிப் பொன்தேடிஅப்
பாா்வைக்கீந்து
இறந்திடவோ பணித்தாய் இறைவா? கச்சி
ஏகம்பனே! (30)

நாறும் உடலை நரிப்பொதி சோற்றினை
நான்தினமும்
சோறுங் கறியும் நிரம்பிய பாண்டத்தைத்
தோகையர்தம்
கூறும் மலமும் இரத்தமும் சோருங் குழியில்
விழாது
ஏறும் படியருள்வாய் இறைவா! கச்சி
ஏகம்பனே! (34)

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவார்;
பூவைஅன்னாள்
தன்னை நினைந்து வெகுவாய் உருகுவார்;
தாரணியில்
உன்னை நினைத்திங்கு உனைப்பூசி யாத
உலுத்தரெல்லாம்
என்னை இருந்துகண்டாய் இறைவா, கச்சி
ஏகம்பனே (38)

காம்பிணங்கும் பணைத்தோளார்க்கும்
பொன்னுக்கும் காசினிக்கும்
தாம்பிணங்கும் பல ஆசையும் விட்டுத்தனித்துச்
செத்துப்
போம்பிணம் தன்னைத் திரளாகக் கூடிப்புரண்டு
இனிமேல்
சாம்பிணம் கத்துதையோ? என்செய்வேன்
தில்லைச் சங்கரனே! (44)

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரம்
கோள்கள்
கல்லாமல் கைதவரோடு இணங்காமல்
கனவிலும்பொய்
சொல்லாமல் சொற்களைக் கேளாமல் தோகையர்
மாயையிலே
செல்லாமல், செல்வம் தருவாய் சிதம்பர
தேசிகனே. (49)

இரைக்கே இரவும் பகலும் திரிந்தங்கு
இளைத்துமின்னார்
அரைக்கே அவலக் குழியருகே அசும்பு
ஆர்ந்தொழுகும்
புரைக்கே உழலும் தமியேனை ஆண்டருள்
பொன்முகலிக்
கரைக்கே கல்லால் நீழற்கீழ் அமர்ந்தருள்
காளத்தியே! (74)

எத்தனைபேர் நட்டகுழி! எத்தனைபேர்
தொட்டமுலை!
எத்தனைபேர் பற்றி இழுத்தஇதழ்! - நித்தநித்தம்
பொய்யடா பேசும் புவியில்மட மாதரைவிட்(டு)
உய்யடா! உய்யடா! உய்!

—பொதுப்பாடல்கள் — 16

## பிற சித்தர்கள்

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகம்காட்டி
மால்காட்டும் மங்கையரை மறந்திருப்ப
தெக்காலம் ?
பெண்ணினல்லார் ஆசைப் பிரமையினை
விட்டொழித்துக்
கண்ணிரண்டும் மூடிக் கலந்திருப்ப தெக்காலம்?

—பத்திரகிரியார் பாடல்கள்
9, 10 கண்ணிகள்

பெண்ணாசை யைக்கொண்டு பேணித்
திரிந்தக்கால்,
விண்ணாசை வைக்க விதியிலையே கல்மனமே!

— இடைக்காட்டுச்சித்தர்
52 ஆம் கண்ணி

பிச்சையென்று ஒன்றும் கேளாதே - எழில்
பெண்ணாசை கொண்டு பெருக்கமா ளாதே!

— கடுவெளிச்சித்தர் — 9 ஆம் பாடல்

மைவிழி யாரைச் சாராதே - துன்
மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்து
சேராதே !

கடுவெளிச்சித்தர் — 24

வெயில்கண்ட மஞ்சள்போன்ற மாதர் அழகை
விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்
ஒயில்கண்டே இலவுகாத்து ஓடும் கிளிபோல்
உடல்போனால் ஓடுவாரென்று ஆடுபாம்பே!
(50)

செண்டுமுலை வண்டுவிழி கொண்ட
தோகையைச்
சித்தப்பால் விழுங்கியே சீயென்று
ஒறுத்தோம்!
குண்டுகட்டெ ருமையேறுங் கூற்றுப் பருந்தைக்
கொன்றுதின்று விட்டோமென்று
ஆடுபாம்பே! ( 51)

வட்டமுலை என்றுமிக வற்றுந்தோலை
மகமேரு என்றுவமை வைத்துக் கூறுவார்
கெட்டநாற்ற முள்ளயோனிக் கேணியில்
வீழ்ந்தார்
கெடுவர் என்றேநீர் துணிந்து
ஆடுபாம்பே !(52)

மலஞ்சொரி கண்ணைவடி வாளுக்கொப் பாக
வருணித்துச் சொல்வார் வன்மைஇல் லாதார்
குருநலம் பேசுகின்ற கூகை மாந்தர்கள்
கும்பிக்கே இரையாவர் என்று ஆடு
பாம்பே ! (53)

சிக்குநாறுங் கூந்தலையே செழுமை மேகமாய்ச்
செப்புவார்கள் கொங்கைதனைச் செப்புக்
கொப்பதாய்
நெக்குநெக்கு உருகிப் பெண்ணை நெஞ்சில்
நினைப்பார்
நிமலனை நினையார் என்றாடு பாம்பே! (54)

நாறிவரும் எச்சில்தனை நல்லமு தென்றும்
நண்ணுஞ்சளி நாசிதனை நற்குமிழ்
என்றும்
கூறுவார்கள் புத்தியில்லாக் கூகை மாந்தர்கள்
கோன்நிலையை அறியார் என்றாடு
பாம்பே ! (55)

மயில்என்றும் குயில்என்றும் மாணிக்கம் என்றும்
மானேயென்றும் தேனேயென்றும் வான்
அமுதென்றும்
ஒயிலான வண்ணமயில் ஒத்தவ ளென்றும்
ஓதாமற் கடிந்துவிட்டு ஆடு பாம்பே! (56)

மின்னல்கொடி யென்றுஞ் சோதி
விளக்கமென்றும்
மெல்லியென்றும் வல்லியென்றும் மேனகை
யென்றும்
கன்னற்கட்டி யென்றுஞ்சீனிக் கற்கண்டு
என்றும்
கழலாமல் கடிந்தோம் என்றாடு பாம்பே!
(57)

பூவையென்றும் பாவையென்றும் பொன்னே
யென்றும்
பூந்திருவே என்றும்என்றன் பொக்கிசம்
என்றும்
கோவையென்றும் கோதையென்றும் கோகிலம்
என்றும்
கூறாமல் துறந்தோம் நாம்என்று ஆடு-
பாம்பே! (58)

மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும் புழுக்கூட்டின் மேல்வண்ணத்
தோல்என்றும்
சலக்குழிக் குள்ளேநாற்றஞ் சார்ந்த சேறென்றும்
தான்அறிந்து தள்ளினோம் என்றாடு
பாம்பே! (59)
— பாம்பாட்டி சித்தர்

வேண்டாத மனையினில் உறவு செய்யோம்
சோதித் துலாவியே தூங்கி விடுவோம்
சுகமான பெண்ணையே சுகித்திருப்போம்
— பாம்பாட்டி சித்தர்

ஊத்தைச் சடலமெண் றெண்ணா தேயிதை
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே (24)
— கொங்கணச் சித்தர்

*"கற்புள்ள மாதர் குலம்வாழ்க
........................... .........................''
மண்ணுமில் லாம விண்ணுமில்லை - கொஞ்சம்
வாசமில் லாமலே பூவுமில்லை
பெண்ணுமில் லாமலே யாணுமில்லை - இது
பேணிப் பாரடி வாலைப்பெண்ணே! (72)
— கொங்கணச் சித்தர்

.... ................ .................... கற்பு
மங்கையர்மேல் மனம் வையாதே (90)
— கொங்கணச் சித்தர்

பெண்ணாசை தன்னை யழிக்காமல் — வழி
பேணிப் பாரடி ஞானப்பெண்ணே! (44)

*(பெண்மை போற்றும் சித்தர் பாடல்கள்) 'ஞானக்கும்மி'
வாலைச்சாமி

.............................................

...................... ..............................

வாராய்நீ யென்மகான பெண்ணால் சிக்கி
மகத்தான ரிடிகள்சித்தர் கோடி கெட்டார்
தாரான சித்தரொரு பஞ்ச கர்த்தாள்
தயங்கிநின்று படும்பாடு சாற்று வேனே! (85)

சாற்றுவேன் வீதிபடு குழிதா னுண்டு
தன்மேலே புல்லொடு செடியு மூடி
மாற்றுவேன் வீதியிலே நடந்தோன் வீழ்ந்த
வாறொக்கும் பெண்ணான மாயக்கூபம்
சாற்றுவேன் என்றாலு மாற்றப் போகா
சரகரா பெண்ணரவு கடித்த தானால்
போற்றுவே னென்றாலும் பொல்லாக் காமம்
பொறிவிட்ட நெய்போலப் பொங்கும் பாரே! (86)

— சட்டைமுனி சித்தர்

## திருவேங்கட சதகம்

'சிக்குமிக வேநாறு கின்றகுழன் முகிலென்பர்
திரளூத்தை மாறாத வாய்
செம்பவள மென்பர்சளி கொண்டுநீர் மாறாத
சிறுநாசி குமிழ தென்பர்
பக்குவம தன்றிவிழு கின்றமுலை யானதோற்
பையைமக மேருவென்பர்
பாராத நரகத் துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பர்
மிக்குவரு ரத்தமுஞ் சீயுமென் பும்போர்த்த

மேனிமலர் மாலை யென்பர்
மீளாத நரகந் தருஞ்சிறிய வின்பமதை
மேலின்ப வீடென்பரிம்
மைக்கருங் கடலிலெனை விழாம லாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடராயனே! (88)

'பெண்டுகள்சொற் கேட்கின்ற
பெயரெனுங் குணமூடப் பேடி லோபர்
முண்டைகளுக் கிணையில்லா
முனைவீரர் புருடரென மொழியொ ணாதே!
உண்டுலக முதிர்ப்பாருள்
கீர்த்தியற மின்னதெனு முணர்வேயல்லார்
அண்டினர்த மைக்கெடுப்பா
ரழிவழக்கே சொல்வதவ ரறிவு தானே'

— விவேகசிந்தாமணி — 98

மைவிழியார் மனை அகல்

— ஔவையார் ஆத்திசூடி — 96

மைவிழியார் மனைஅகன்று ஒழுகு

— ஔவையார் கொன்றைவேந்தன் — 78

**பாடுபொருள் மாற்றம்: பெண்மை போற்றல்**

தையலை உயர்வுசெய்

— பாரதியார் கவிதைகள், புதிய ஆத்திசூடி — 50

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!

தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பெயரும் ஸதியென்ற நாமமும்
அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்!
ஆசைக் காதலைக் கைகொட்டி
வாழ்த்துவோம்!
துன்பந் தீர்வது பெண்மையி னாலடா!
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்!
வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்

.......................................................................

கலிய ழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம்'

— பாரதியார் கவிதைகள்' 25 'பெண்மை'

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாமென்
கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ
பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே!

— பாரதிதாசன் கவிதைகள் — 1
'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்'

[இப்பாடல்களில் முன்னவை பரத்தையரை, பெண்ணை வெறுத்தல் என்றும் பின்னவை பெண்மை போற்றல் என்றும் அமைந்தவை.]

## 'இயற்கை அறம்'

— திரு. வி. க.

''பட்டினத்தார்

நமதுநாட்டிற் றோன்றிய ஞானியருள் பெண்ணைப் பெரிதும் இழித்துப் பாடினவர் பட்டினத்தார் என்று பலர்

சொல்ல யான் கேட்டிருக்கிறேன். அவர் பெண்ணை வெறுத்துப் பாடினமையால், அவரது துறவு நிலையை, 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆருந் துறக்கை அரிதரிது' என்று அனுபூதிமானாகிய தாயுமானாரே விதந்தோதியிருக்கிறார் என்று சிலர் கருதுவதும் எனக்குத் தெரியும். பட்டினத்தார் மிகப் பெரியவர்; முற்றும் மனமாச கலப் பெற்றவர். அவர் இவ்வுலகிலேயே சிவலோகம்பாவனை நிலையுற்று, எல்லாவற்றையுஞ் சிவமாக் கொண்டு, 'வாவி யெல்லாந் தீர்த்தம் மணலெல்லாஞ் சிவலிங்கம்' என்று பாடினவர். பட்டினத்தார்க்குப் பார் முழுவதுஞ் சிவமாகக் காணப்பட்டதே யன்றி, மாயையாகக் காணப்படவில்லை. அதனால் அவரது பெருநிலையைத் தாயுமானார் உலகிற்கு எடுத்துக்காட்டினார். மனமாசு முற்றும் அகல்வதே துறவு நிலை என்று முன்னே விளக்கியிருக்கிறேன். அத் துறவு நிலை எய்தினவர் பட்டினத்தார் என்க.

**பட்டினத்தார் பெயரால் இருவிதநூல் :**

பெண்ணை வெறுத்தல் 'துறவு' அல்லது 'ஞானம்' என்று பட்டினத்தார் பகர்ந்தனரா என்பதொன்றே ஈண்டுப் பெரிதும் கருதற்பாற்று. பட்டினத்தார் பெயரால் இருவித நூல்கள் உலகில் உலவுகின்றன. பதினொராந் திருமுறையில் பட்டினத்தார் அருளிய சில நூல்கள் அடங்கியிருக்கின்றன. பட்டினத்தார் அருளிய 'திருப்பாடற்றிரட்டு' என்றொரு நூலும் ஆட்சியிலிருக்கிறது. இத்திரட்டு பதினொராந்திரு முறையில் சேர்க்கப்பட்டில்லை.

**பட்டினத்தாரும் பெண்ணும் :**

மொழி வனப்பு, பாநடை முதலியவற்றை நோக்குழி இரண்டிற்கும் உள்ள வேற்றுமை நன்கு புலனாகும். ஆனால் பட்டினத்தார் இருவர் இருந்தனர் என்பதற்குப் போதிய சான்று கள் கிடைக்கவில்லை. பெண்ணைப் பற்றிய மயக்க உரைகள் பெரிதும் 'திருப்பாடற்றிரட்டிலேயே' கிடக்கின்றன. பதி னொராந் திருமுறையில் ஒரு பகுதியைப் பாடிய பட்டினத்தார், 'திருப்பாடற்றிரட்டைப்' பாடியிருப்பரோ என்னும் ஐயம்

ஆராய்ச்சியாளருக்கு இயல்பாக எழும். இவ்வாராய்ச்சியில் தலைப்படாது. பெண்ணைப் பற்றிப் பட்டினத்தார் கொண்ட கருத்தென்னை என்பதன் மீது கருத்தை இருத்துவோம். பதினொராந் திருமுறையில் பட்டினத்தார் அருளிய 'திருவிடை மருதூர் மும்மணிக்கோவை'யில் 'மலர்தலை உலகத்துப் பலப் பல மாக்கள்.........' என்று தொடங்கும் பாடலில் வரூஉஞ் செம்மொழிகளைப் பன்முறை உற்று உற்று நோக்குக. இத்திரு வாக்கில் இல்வாழ்விற்கும் கடவுள் நெறிக்கும்உள்ள தொடர் பைக்கூர்ந்து ஊன்றிப் பார்க்க. இக்கருத்துடைய பட்டினத்தார் பெண்ணை இழித்துக் கூறுவாரோ? ஒரு போதும் கூறார்.

திருப்பாடற்றிரட்டும் இப்பட்டினத்தாரே அருளினரென்று கருதப்படின், அதன்கண் ஒளிரும் பெண்ணைப் பற்றிய பாடல்கள், பெரிதும் பெண்ணைக் காமப்பொருளாக எண்ணும் மனத்துக்கும், காமுகர்க்கும் வரைவின் மகளிர்க்கும் அறிவு கொளுத்தும் நோக்குடன் அருளிச்செய்யப்பெற்றன என்று கொள்ளப்படல் வேண்டும். வேறு ஒரு பட்டினத்தாராயினும் இவ்வாறு கோடல் தவறாகாது. திருப்பாடற்றிரட்டிலுள்ள இரண்டொரு திருவாக்குகளை நோக்குவோம். 'தோகையர் மாயையிலே செல்லாமல் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே;,'' 'மாலை உபாதி துயில் காமம் இலை மாற்றிவிட்டே — ஆல முகந்தருள் அம்பலவா என்னை ஆண்டருளே'' 'சிற்றின்பம் விட்டு ஏறும் பதந்தருவால் திருக்காளத்தி ஈசுரனே' எனவரூஉம் அடிகளின் திருவாக்குகள் பெண்ணை வெறுக்குமாறா அறிவிக்கின்றன? 'பெண் காமப்பொருள்' என்று நினைக்கும் நெஞ்சை நல்வழியில் திருப்ப ஆண்டவன் அருளையல்லவோ அத்திரு வாக்குகள் குறிக்கொண்டு நிற்கின்றன? 'பட்டப்பகலில் வெளி மயக்கே செய்யும் பாவையர்மேல் இட்டத்தை நீ தவிர்ப்பாய் இறைவா கச்சி ஏகம்பனே' என,வரூஉம் இன்னோரன்ன கருத்து உடைய பாக்களில் வரைவின் மகளிர் நடைமுறைகளை அடிகள் விளக்கியவாறு காண்க. வேறு பல இழிமொழிகள் அடங்கிய பாக்கள் தூர்த்தர்கட்கு நல்லறிவு கொளுத்த அருளிச் செய்யப் பெற்றன என்க. பட்டினத்தடிகள் கருத்தில் பெண்ணை வெறுத்தல் இல்லை என்பதொன்றையே நேயர்கள் கவனிப் பார்களாக.

'பேய்போற் றிரிந்து பிணம்போற்
கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ
லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற் கருதித் தமர்போ
லனைவர்க்கும் தாழ்மை சொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை
ஞானம் தெளிந்தவரே'

*இப்பாட்டுந் 'திருப்பாடற்றிரட்டி' லிருப்பது. எல்லா ஐயங்களையும் போக்கி, அடிகளின் உள்ளக் கிடக்கையைச் செவ்வனே தெரிக்கிறது. நன்மங்கயரைத் தாய்போல் கருதுமாறு அடிகள் உலகிற்கு அறிவுறுத்துகிறார். அஃது 'உண்மைஞானந் தெளிந்தவர் இயல்பு' என்றும் அவர் கூறுகிறார்.*

*'நன்மங்கையரைத் தாய்போல் கருதுவது உண்மைஞானம்' என்று கூறிய ஞானியா பெண்ணை வெறுப்பார்? அவளை மாயை என்று கூறுவர்? எந்த உண்மை ஞானியும் தாயாகிய பெண்ணை வெறுத்து இழித்துக் கூறார்.*

*அருணகிரியார் வரைவின் மகளிரைப் பற்றிக் குறித்த பாடல்களும் பெண்ணைப் பொதுவாகக் குறிப்பன என்று எண்ணி இடர்ப்படுவோரும் உளர்.........''*

— **பெண்ணின் பெருமை.** பக் 172 — 176

# சொல்லடைவு

[எண் — செய்யுள் எண்]
(i - காப்புச் செய்யுள்
o - நூற்பயன் கூறும் பாடல்)


| | |
|---|---|
| அகம் | 52 |
| அச்சுதன் | 53 |
| அஞ்சுதல் | 19,21 |
| அடி (பாதம்) | 44 |
| அடியேன் | (i) |
| அணி | 6 |
| அதட்டுதல் | 33 |
| அம்பு | 7 |
| அமுது | 4,13 |
| அமுர்தம் | 37 |
| அமைச்சர் | 32 |
| அயன் | 19 |
| அரசர் | 22 |
| அரவம் | 7 |
| அரவு | 4 |
| அரிவையர் | 25 |
| அழகு | 24,41,46 |
| அழிவு | 23 |
| அழுதல் | 47 |
| அற்பர் | 4,24,26 |
| அறிவு | 2,3,22 |
| அறிவுள்ளோர் | 24 |
| அறுசுவை | 13 |
| அன்பு | 4,5,13,24 |
| ஆட்டம் | 25 |

| | |
|---|---|
| ஆண்மை | 18,29 |
| ஆய்தல் | 35 |
| ஆழம் | 6 |
| இகல் | 51 |
| இகழ்ச்சி | 11 |
| இகழ்தல் | 32 |
| இங்கிதம் | 37 |
| இடம் | 44 |
| இடர் | 19,37,48 |
| இடறும் | 44 |
| இடுக்கண் | 44 |
| இணக்கம் | 32,38 |
| இணை | 50 |
| இரத்தல் | 30 |
| இரு | (i) |
| இலங்குதல் | 42 |
| இலங்கை | 28 |
| இன்பம் | 13 |
| இன்மை | 43 |
| ஈயும் | 10 |
| உகத்தல் | 0 |
| உடல் | 52 |
| உணர்வு | 31 |
| உத்தமர் | 42 |
| உதவி | 12 |
| உதித்தல் | 18 |
| உபகாரம் | 10 |
| உபாயம் | 41 |
| உயரம் | 6 |
| உயிர் | 19,21,52 |
| உரம் | 31 |
| உலகு | 42,45 |
| உலுத்தர் | 9 |
| உற்பனம் | 4,26 |

| | |
|---|---|
| உறவு | 37 |
| உன்னிய | 21 |
| ஊட்டுதல் | 4,37 |
| ஊதுதல் | 22 |
| ஊர் (ஊரு) | 17 |
| எக்குதல் (எக்கிய) | 30 |
| எருக்கு | 10 |
| எழுதுவோர் | 0 |
| ஏகமாய் | 10 |
| ஐங்கரத்தோன் | (i) |
| ஐங்காயம் | 2 |
| ஒண்ணாது | 6 |
| ஒயில் | (i) |
| ஒளி | 15 |
| ஓங்கிய | 4 |
| ஓசை | 0 |
| கசக்கும் | 2 |
| கசடர் | 1 |
| கசப்பு | 5 |
| கடல் | 6,28 |
| கணக்கு | 6 |
| கணபதி | (i) |
| கணவன் | 24,49,52 |
| கணை | 22 |
| கதிர் | 12 |
| கந்தன் | (i) |
| கம்பம் | 12 |
| கமை | 52 |
| கயம் | 9 |
| கயல் | 49 |
| கருடம் | 50 |
| கரை | 9 |
| கல்வி | 39 |

| | |
|---|---|
| களரி | 31 |
| கற்பு | 24,41 |
| கன்மம் | 43 |
| காகம் | 34,36 |
| காப்பு | (i) |
| காயும் | 9 |
| கார் (கருமை,முகில்) | 49 |
| காரியம் | 9 |
| காருபாரு(கார்பா(வா)ர்) | 32 |
| கால் | 44 |
| காலி (பசு) | 33 |
| கிருகை | 14 |
| கிருத்துவம் | 32 |
| கிள்ளை | 25 |
| கிளை | 43 |
| கீர்த்தி | 15 |
| குக்கல் | 30 |
| குஞ்சரம் | 7 |
| குடல் | 30 |
| குணம் | 2,4,13,26,31,45 |
| குதித்தல் | 18 |
| குப்பை | 15 |
| குமாரன் | 23 |
| குரங்கு | 21 |
| குரு | 32 |
| குருக்கள் | 35 |
| குருமொழி | 26 |
| குலுங்குதல் | 37 |
| குலைத்தல் | 11 |
| குழல் (கூந்தல்) | 49 |
| கூடை | 50 |
| கூத்தாடி | 31 |

| | |
|---|---|
| கூர் (கூரு) | 8 |
| கூர்மை | 16 |
| கெச்சம் | 39 |
| கெட்டி | 14 |
| கெப்புதல் | 47 |
| கெருடன் | 39 |
| கெருவிதஞ்செய்தல் | 47 |
| கேடு | 35 |
| கேள்வி | 10,26,32 |
| கேளிர் | 22 |
| கை | 27,36 |
| கைப்பொருள் | 42 |
| கொங்கை | 25,37 |
| கொச்சை | 37,53 |
| கொஞ்சுதல் | 49 |
| கொடும்பகை | 18 |
| கொண்டவர்(கணவர்) | 16 |
| கொம்பன் | 32 |
| கொம்பு | 7 |
| கொழுந்து | 10 |
| கோடி | 18 |
| கோதுதல் | 49 |
| கோபி (கோபங்கொண்டவள்) | 47 |
| கோவை | 37 |
| கோழி | 39 |
| சங்கு | 17,22 |
| சஞ்சாரம் | 13 |
| சந்தம் | 25 |
| சந்திரன் | 45 |
| சபை | 39 |
| சம்பா | 26 |
| சமர் | 18 |
| சமன் | 52 |
| சரணம் | (i) |

| | |
|---|---|
| சலித்தான் | 20 |
| சவாது | 50 |
| சன்னை | 47 |
| சாணி | 50 |
| சாதம் | 17 |
| சார்வு (சார்பு) | 34 |
| சித்தி | (i) |
| சித்திரம் | 46,48 |
| சிந்தை | 20 |
| சிலம்பம் | 31 |
| சிலம்பு | 37 |
| சிலை | 24 |
| சினம் | 11 |
| சீரிமை | 49 |
| சீரு (சீர்) | 16 |
| சீறுதல் | 38 |
| சீஷன் | 32 |
| சுத்த | 31 |
| சும்மா | 12 |
| சுவர் | 46 |
| சூடு | 12 |
| சூது | 41 |
| செகம் | 51 |
| செகுடன் | 22 |
| செங்கோல் | 23 |
| செந்தேன் | 5 |
| செந்நெல் | 12 |
| செய்கை | 3,36,40 |
| செயம் | 23,46 |
| செருக்குதல் | 16 |
| செல்வம் | 16 |
| செல்வவான் | 38 |
| செவித்தல் (செபித்தல்) | 43 |
| சேகரம் | 38 |

சேறு 12
சொர்ணம் 27
சொல் 7,40,45
சோதித்தல் 41
தண்ட (குளிர்ந்த) 1
தந்தி (நரம்பு) 17
தந்தை 35
தம்பி 16,47
தமிழ் 42,53
தமிழறிவித்தோர் 35
தயவு 46
தர்மர் 23
தன்மம் (தர்மம்) 23
தாஷ்ட்டிமை 8
தாய் 35,40
தாழ்வு 34
தாள் (i)
திசை 42
திருதராட்டிரன் 23
திருமுகம் (அழகியமுகம்) 13
தின்மை (தீமை) 23.43
தினம் 49
தீபம் 25
தீவினை 21
துடியொடு 36
துர்க்குணம் 3,22
துர்ச்சனர் 36
துர்ச்சனன் 12
துரைத்தனம் 22,32
துலக்கம் 46
துலங்குதல் 4.5
துன்மார்க்கர் 1
தெண்டினை 16
தெய்வானை (i)

| | |
|---|---|
| தெரு | 30, 31 |
| தென்டு | |
| தேன் | 1,5,27 |
| நக்குதல் | 27 |
| நகை | 15 |
| நங்கையர் | 37 |
| நடம் | 36 |
| நண்டு | 16 |
| நந்தன் | (i) |
| நயந்து | 9 |
| நயம் | 46 |
| நரகம் | 10 |
| நரகு (மலம்) | 27 |
| நரி | 32 |
| நல்லவர் | 5 |
| நல்லோர் | 1,4,8,34,35,51 |
| நற்பதை | 4 |
| நன்மை | 23,43,47 |
| நன்றி | 21 |
| நன்னெறி | 21 |
| நாகம் | 20,38 |
| நாகர் (பாம்பு) | 53 |
| நாட்டுதல் (நாட்டிய) | 12 |
| நாடு | 22,25 |
| நாணம் | 50 |
| நாதம் | 17 |
| நாதன் | 41 |
| நாய் | 11,35,45 |
| நாய்க்குணம் | 2 |
| நாய்த்தவம் | 3 |
| நாயன் | 40 |
| நார் | 34 |
| நாரியர் | 49 |
| நாழி | 16 |

| | |
|---|---|
| நாற்பது | 0 |
| 'நான்' | 29 |
| நிகழ்த்துதல் | 11 |
| நிச்சயம் | 0 |
| நிமை | 52 |
| நிலம் | 26,48 |
| நிறம் | 34,51 |
| நீச்சு | 28 |
| நீதம் | 17 |
| நீதி | 22 |
| நீதிசாரம் | (i) |
| நூல்கள் | 48 |
| நூலோர் | 35 |
| நெஞ்சு | 14 |
| நேசம் | 0 |
| நேயம் | 11,35 |
| நேரிழை | 17 |
| நொந்து | 20 |
| பகரும் | 36 |
| பங்கன் | (i) |
| பங்கையம் | 37 |
| பட்சணம் | 20 |
| பட்சி | 25 |
| பட்டு | 15 |
| படித்தல் | 0 |
| படை | 18 |
| பணி (அணிகலன்) | 46,50 |
| பத்து | 0 |
| பதவி | 0 |
| பதி | 24,44 |
| பந்தம் | 25 |
| பந்து | (i) |
| பயத்தல் (பயந்த) (நல்கிய) | 9 |

| | |
|---|---|
| பயிர் | 26 |
| பரத்தை | 32 |
| பராக்கிரமம் | 9 |
| பரி | 36 |
| பருத்தல் | 31 |
| பல் | 45 |
| பவனி | (i) |
| பழி | 44 |
| பவனி | (i) |
| பழி | 44 |
| பழித்தல் | 8 |
| பாட்டு | 25 |
| பாடல் | (i) |
| பாணர் | 15 |
| பாதம் | 37 |
| பாப்பு | 17 |
| பார் (உலகம்) | 32,34,51 |
| பார | (i) |
| பாரி (மனைவி) | 52 |
| பிணம் | 31 |
| பிலுக்கு | 12 |
| பிள்ளை | 16,17.40 |
| பிறந்த | (i) |
| புகலுதல் | 48 |
| புகழ் | 15,23 |
| புகை | 51 |
| புண்ணியம் | 51 |
| புத்தன் | 29 |
| புத்தி | 5,14 |
| புதைதல் | 15,30 |
| புல்லர் | 2 |
| புல்லறிவாளர் | 5 |
| புலவர் | 48,53 |
| புலன் | 48 |

| | |
|---|---|
| புலி | 33 |
| புவி | 29 |
| புன்சொல் | 53 |
| புனல் | 3 |
| பூசை | 17,49 |
| பூவுலகு | (i) |
| பெண்டிர் | 16 |
| பெரியோர் | 11 |
| பெருகுதல் | 11 |
| பேச்சு | 9,10 |
| பேசுதல் | 11 |
| பேணுதல் | 2 |
| பேய்க்கருங்குமட்டிக்காய் | 2 |
| பேர் | 40,42 |
| பொக்கிஷம் | 27,30 |
| பொய்ச்சொல் | 24 |
| பொருமுதல் | 51 |
| பொருள் | 27,28,30 |
| பொருள் (கருத்து) | 53 |
| பொல்லோர் | 1 |
| பொன் | 23,34,50 |
| பொன்றிட | 19 |
| போக்குநீக்கு | 2 |
| போடி | 19 |
| போதித்தல் | 5 |
| போர் (வைக்கோல்) | 12 |
| மகன் | (i) |
| மஞ்சள் | 24 |
| மட்டிப்பால் | 14 |
| மட்டு (அளவு) | 11 |
| மடந்தையர் | 7 |
| மடபதி | 6 |
| மண்டூகம் | 1,2 |
| மணம் | 3,10,34 |

மணவாளள் 46
மதம் 29
மதலைச்சொல் 40
மதி 18
மயம் 46
மயில் (i)
மரம் 21
மருக்கொழுந்து 10
மருட்டுதல் 49
மலர் 1,2,34
மணம் 6,41
மனைவி 6
மாடம் 17
மாதர் 13,24,41,45,49,50
மாது 32
மாந்தர் 2,8,30
மாயன் 40
மார்க்கம் 9
மாரி 25,30
மாலை (i), 40
மிசை 36
மிஞ்சி (விஞ்சி) 11
மின் 24
மீறுதல் (மீறும்) (i)
மீறி 10, 81
மீன் 9
மீன் (விண்மீன்) 18
முக்கனி 27
முகம் 46, 37
முடி 6, 53
முடுக்குதல் (துரத்துதல்) 21
முத்தி (முந்தி) 41
முப்பொழுது 4
முலை (i), 4

| | |
|---|---|
| மூத்தோர் | 35 |
| மூதூர் | 28 |
| மூன்று | 0 |
| மெய் (உடம்பு) | 20 |
| மெய்சொல் | 10 |
| மேடு | 12 |
| மேய்தல் | 36 |
| மேர்வு (மேரு) | 34 |
| மேளம் | 43 |
| மைந்தன் | 29 |
| மொழி | 7 |
| மோச்சம் | 51 |
| மோசம் | 7 |
| மோடர் (மூடர்) | 33, 42, 48 |
| மோதகம் | (i) |
| யானை | 25 |
| யோகம் | 20,38 |
| ரச்சகன் | 53 |
| ரட்டிப்பு | 14 |
| ரணகளம் | 31 |
| ரத்னம் | 20,15 |
| ரம்பையம் | 13 |
| ராச்சியம் | 39 |
| ராசகோபாலமாலை | 0 |
| ராசகோபாலன் | (i) |
| ராசி | 52 |
| ராட்சதன் | 28 |
| ராட்டினம் | 8 |
| ருசி | 2 |
| ரூபம் | 42 |
| வஞ்சம் | 6 |
| வண்டர்கள் | 16 |
| வண்டு | 1,2 |
| வணங்குதல் | 38 |

| | |
|---|---|
| வம்பு | 7,47 |
| வருத்தம் | 14 |
| வரை | (i) |
| வல்ல | 5 |
| வல்லமை | 29 |
| வள்ளி | (i) |
| வறுமை | 16 |
| வன்மை | 36 |
| வனம் | 1 |
| வாகன யோகம் | 38 |
| வாகுடன் | 5,11 |
| வாசம் | 3,10 |
| வாசல் | 43 |
| வாசவன் | 0 |
| வாய் | 11, 40 |
| வால் | 7 |
| வாழ்க்கை | 16, 30 |
| வாழ்வு | 28, 43, 0 |
| வாழும் | (i), 1 |
| வாழை | 34 |
| வானம் | 29 |
| விசாரணை | 22 |
| விசை | 22 |
| விடுநாள் | 28 |
| விந்தை | 17 |
| விதி | 8, 19 |
| வித்தை | (i) |
| விபரம் | (i) |
| விழி | 49, 52 |
| விழுது | 19 |
| விளம்புதல் | (i) |
| வினை | 44 |
| விஷம் | 4 |
| வீட்டிமை | 12 |

| | |
|---|---|
| வீடு | 25 |
| வீண் | 47 |
| வீணை | 17 |
| வீரர் | 22, 31 |
| வீரன் | 23 |
| வீரியம் | 49 |
| வெற்பு | 26 |
| வேகம் | 20 |
| வேங்கை | 21 |
| வேசி | 49 |
| வேசியர் | 24 |
| வேடன் | 21 |
| வேதம் | 17 |
| வேதாந்தம் | 35 |
| வேந்தர் | 15,24,25,32 |
| வேப்பஞ்சாறு | 5 |
| வேலை (பணி) | 16 |


—o—

# நூலில் பயின்றுள்ள
# பேச்சுவழக்குச் சொல்லடைவு

[வட்டார வழக்கும்]
[எண் : செய்யுள் எண்]

| | |
|---|---|
| அடந்தவர்க் (அடைந்தவர்) | 44 |
| அடவுடன் (அடைவுடன்) | 6 |
| ஆச்சி | 28 |
| ஆச்சியாய் | 39 |
| ஆத்திடை (ஆற்றிடை) | 3 |
| ஓர்வன் (ஒருவன்) | 16 |
| கத்தறியாத மோடர் (கற்றறியாத மூடர்) | 42 |
| காச்சியாய் (காட்சியாய்) | 39 |
| காயிற (காய்கின்ற) | 11 |
| காருபாரு (கார்பார்) | 32 |
| குலைகள் (கொலைகள்) | 7 |
| குலைத்தல் (குரைத்தல்] | 11 |
| கெணியார் (கவனிக்கமாட்டார்) | 38 |
| கெருடன் (கருடன்) | 39 |
| கோச்சையாய் | 39 |
| சுத்து (சுற்று) | 8 |
| செகுடன் (செவிடன்) | 22 |
| செவித்த (செபித்த) | 43 |
| சேத்தில் (சேற்றில்) | 12 |
| தட்டதுகெட்டால் | 15 |
| திக்கவே (திசையெல்லாம்) | 30 |
| தின்மை (தீமை) | 23,43 |
| துகை (தொகை) | 6 |
| துடந்தது (தொடர்ந்தது) | 44 |

| | |
|---|---|
| தேச்சிது | 28 |
| தோண (தோன்ற) | 50 |
| தோத்திய (தோற்றிய) | 3 |
| நத்தமிழ் (நற்றமிழ்) | 42 |
| பேய்ந்து (பெய்து) | 80 |
| போச்சு (போயிற்று) | 14 |
| மிஞ்சி (விஞ்சி) | 11 |
| மோச்சம் (மோட்சம்) | 31 |
| மோடர் (மூடர்) | 33,48 |
| ரண்டதும் (இரண்டதும், இரண்டும்) | 1 |
| ரட்டிப்பு (இரட்டிப்பு) | 14 |
| விரை (விதை) | 26 |
| விரைத்த (விதைத்த) | 12 |
| வேப்பஞ்சாத்தை (வேப்பஞ்சாற்றை) | 5 |

—o—

# பாடல் முதற்குறிப்பு அகராதி

எண்: பாடல் எண், i - காப்புச் செய்யுள்
o - நூற்பயன் கூறும் பாடல்


| வரிசை எண் | தொடர் | பாடல் எண் |
|---|---|---|
| 1 | அச்சுதன் முடியின் மீது | 53 |
| 2 | அம்புபோல் நீண்ட வாலாம் | 7 |
| 3 | ஆச்சிதம் பொருள்ந மக்கு | 28 |
| 4 | ஆச்சியாய்க் கற்ற கல்வி | 39 |
| 5 | ஆட்டத்துக் கழகு பந்தம் | 25 |
| 6 | இடம்பதி தனையி கழ்ந்து | 44 |
| 7 | இன்பமில் லாத மாதர் | 13 |
| 8 | இன்மையில் கிளையும் வாழ்வு | 43 |
| 9 | உணர்வுகள் நிறையக் கொண்டு | 31 |
| 10 | உற்பன மாக நல்ல | 26 |
| 11 | எத்திசை யதனில் பேராம் | 42 |
| 12 | எருக்கலங் கொழுந்து மீறி | 10 |
| 13 | கடலது ஆழ மென்னுங் | 6 |
| 14 | கடினம தாகப் பேசி | 36 |
| 15 | கயந்தனில் துள்ளும் மீன்கள் | 9 |
| 16 | கற்புள்ள மாதர்க் கன்பு | 24 |
| 17 | கற்றவர் தங்கள் முன்னே | 33 |
| 18 | காரிரு குழல்கள் கோதி | 49 |
| 19 | குருதனை யிகழ்ந்த சீஷன் | 32 |
| 20 | கூட்டுதல் குறைந்து போகும் | 8 |
| 21 | கூடிய படையில் தானே | 18 |
| 22 | சமனிரை ராசி யாகச் | 52 |
| 23 | சொல்லினுக் கடங்கு மாதர் | 45 |
| 24 | தண்டமா மலரின் தேனைத் | 1 |
| 25 | தம்பியே என்பாள் பின்னும் | 47 |

| | | |
|---|---|---|
| 26 | தாயொடு தந்தை மூத்தோர் | 35 |
| 27 | தாளென நின்றான் புத்தன் | 29 |
| 28 | தின்மைமீய புரிந்த வீரன் | 23 |
| 29 | துர்க்குணம் படைத்த வீரர் | 22 |
| 30 | தெண்டினை யிலாத வேலை | 16 |
| 31 | நந்தன்மகன் மோதகத்தின் | (i) |
| 32 | நீடிய விதியில் லாமல் | 19 |
| 33 | பங்கைய முகங்கள் காட்டி | 37 |
| 34 | பட்டது கிழிந்து போனால் | 15 |
| 35 | புசையது நிறமென் றெண்ணிப் | 51 |
| 36 | புலனொடு நூல்க ளாய்ந்து | 48 |
| 37 | பூணதோர் பணிகள் தோணப் | 50 |
| 38 | பூத்திடும் மலரின் வாசம் | 3 |
| 39 | பேய்க்கருங் குமட்டிக் காய்க்குப் | 2 |
| 40 | பொக்கிஷம் பொருளும் தூரம் | 27 |
| 41 | பொக்கிஷம் பொருளைத் தேடி | 30 |
| 42 | மட்டிப்பால் திறந்தார் நெஞ்சில் | 14 |
| 43 | மயம்பெறப் பணிகள் பூண்டால் | 46 |
| 44 | மாதருக் கழகு கற்பு | 41 |
| 45 | முப்பொழுது தரவு தன்னை | 4 |
| 46 | முன்னொரு வேடன் றன்னை | 21 |
| 47 | மேட்டினில் விரைத்த செந்நெல் | 12 |
| 48 | மேர்வினில் சிறந்த காகம் | 34 |
| 49 | ராசகோ பால மாலை | 0 |
| 50 | வல்லசெந் தேனின் மேலே | 5 |
| 51 | வாகன யோகம் வந்தால் | 38 |
| 52 | வாயது மட்டு மிஞ்சி | 11 |
| 53 | வாயினில் வந்த சொல்லை | 40 |
| 54 | வேகத்தால் சிந்தை நொந்து | 20 |
| 55 | வேதமில்லாத பாப்பு | 17 |


—O—

# இப்பதிப்பிற்குப் பயன்பட்ட
# துணை நூல்கள்


1. **அறப்பளீசுர சதகம், சதகத்திரட்டு - முதல்பாகம்.** *மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை, 1921*

2. **ஆத்திசூடி,** ஒளவையார், **நீதிக்களஞ்சியம்.** *நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்., சென்னை, இரண்டாம் பதிப்பு 1985.*

3. **உலகநீதி,** உலகநாத பண்டிதர். (இந்நூலும் **நீதிக்களஞ்சியத்தில்** இடம் பெற்றுள்ளது.)

4. **ஒளவையார் தனிப்பாடல்கள்,** ஒளவையார், முல்லை வெளியீடு, விற்பனை உரிமை :பாரிநிலையம், **சென்னை** *1988*

5. **கயிலாசநாதர் சதகம்,** சேலம் சிதம்பரப் பிள்ளை. **சதகத்திரட்டு 2 ஆம் பாகம்,** *மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, 1914.*

6. **குமரேச சதகம்,** (இதுவும் **சதகத்திரட்டு— முதல்பாகம்** நூலில் இடம் பெற்றுள்ளது.)

7. **கொன்றை வேந்தன்,** ஒளவையார். (இந்நூலும் **நீதிக் களஞ்சியத்தில்** இடம் பெற்றுள்ளது).

8. **சித்தர் பாடல்கள்,** *(பட்டினத்தார், பாம்பாட்டி சித்தர், கணபதி சித்தர், கொங்கண சித்தர், வாலைச்சாமி......)* பூம்புகார் பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு, *1987*

9. **செயங்கொண்டார் சதகம்** (இதுவும் **சதகத்திரட்டு — பாகம் 2**இல் இடம் பெற்றுள்ளது.)

10. **தண்டலையார் சதகம்,** *படிக்காசுப்புலவர்,* (இதுவும் **சதகத்திரட்டு முதல்பாகம்** நூலில்இடம்பெற்றுள்ளது).

11. **தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை மூன்றாம் தொகுதி, நான்காம்தொகுதி,)** *பதிப்பாசிரியர், த.கோ. பரமசிவம் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1987).*

12. **தமிழ்ப்பழமொழிகள்:** *தொகுப்பாசிரியர் கி.வா. ஜகந்நாதன், வெளியீடு: காந்தமலை, சென்னை, 1988.*

13. **திரிகடுகம்,** *நல்லாதனார்,* **மூன்றும் நான்கும்,** *பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை, 1980.*

14. **திருக்குறள்,** *திருவள்ளுவர், (பரிமேலழகர்* **உரை** *யுடன்), கழகப்பதிப்பு, சென்னை, 1987.*

15. **திருவேங்கட சதகம்,** *நாராயணபாரதியார் '***இதுவும் சதகத்திரட்டு — முதல்பாகம்** *நூலில் இடம் பெற்றுள்ளது'.*

16. **நல்வழி.** *'ஔவையார்.(இந்நூலும்* **நீதிக்களஞ்சியத்தில்** *இடம்பெற்றுள்ளது'.*

17. **நற்றிணை,** *பின்னத்தூர் நாராயணசாமி* **உரை,** *கழகம். சென்னை, 1956.*

18. **நாலடியார்,** *மதராஸ் அச்சியந்திர சாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு: 1909.*

19. **நான்மணிக்கடிகை.** *விளம்பிநாகனார் 'இந்நூலும்* **மூன்றும் நான்கும்** *நூலில் இடம்பெற்றுள்ளது'.*

20. **பஞ்சதந்திர வசனம்,** *சரசுவதி மகால் நூலகச் சங்க வெளியீடு, தஞ்சாவூர் 1989.*

21. **பழமொழி நானூறு,** *முன்றுறையரையனார், கழக வெளியீடு, சென்னை, 1967.*

22. **பாரதிதாசன் கவிதைகள்** *1 —பாரதிதாசன் செந்தமிழ் நிலையம், புதுக்கோட்டை, 29 ஆம் பதிப்பு: 1990*

23. **பாரதியார் கவிதைகள்,***பாரதியார், வானவில் பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,செம்பதிப்பு: 1987.*

24. **புறநானூறு**, உ. வே. சாமிநாதர் பதிப்பு, (நான்காம் பதிப்பு, சென்னை. 1961.

25. **பெண்ணின் பெருமை,** திரு. வி. க., பூம்புகார் பதிப்பகம், சென்னை, பதினான்காம் பதிப்பு: 1990

26. **யாப்பருங்கலக்காரிகை,** அமிதசாகரனார், கழக வெளியீடு, சென்னை.

27. **விவேகசிந்தாமணி,** ஸ்ரீ தனலட்சுமி புத்தக நிலையம்' சென்னை, 1985,

28. **வெற்றிவேற்கை.** அதிவீரராமபாண்டியர் (இந்நூலும் **நீதிக்களஞ்சியத்தில்** இடம்பெற்றுள்ளது.)

—O—